# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை






16-10-66

விலை 20 காசு

# கேள்வி--பதில்!

1. அசாமில் இன்னமும் பட்டினிக் கொடுமைகள் நீடிக்கிறதா?

காங்கிரசுக்கே வாக்களிக்க வேண்டும் என்று கூறுகிற தமிழக இதழொன்றின் செய்தியை தருகிறேன்; தெரிந்துகொள்ளுங்கள்.

"கோல்பாரா ஜில்லாவிலுள்ள மோர்க்க ராஜா டிவிஷன்களில், பட்டினியிலிருந்து தங்கள் குழந்தைகளைக் காக்க பதினேரு குழந்தைகளை அதன் பெற்றோர் நூறிலிருந்து இருநூறு ரூபாய் விலை வரைக்கும் விற்றிருக்கிறார்கள்."

2. குறைகளை எடுத்துக்கூற, ஊர்வலம் நடத்தும் மாணவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவது எதனால் என்று சொல்லுவீர்களா?

இப்போதே படித்து, பட்டதாரிகளாக இருக்கும் பல்லாயிரக்கணக்கானவர்களிடையே வேலை இல்லாத் திண்டாட்டம் நிலவிக்கொண்டிருக்கிறது. இவர்கள் வேறு பட்டம்பெற்று வெளிவந்தால் இந்தியாவுக்குத் தாங்கும் சக்தி இருக்காது என்று அரசினர் நினைக்கின்றனர்போலும்!

3. உணவுப் பிரச்சினையில் காங்கிரஸ் அரசு வெற்றிகாணும் என்று கூறுகிறேன்! மறுக்க முடியுமா உங்களால்?

நான் ஏன் மறுக்கவேண்டும்? தஞ்சை மாவட்டத்துத் தோழர் ஒருவர் கடிதம் எழுதி இருக்கிறார். அதில் நாளொன்றுக்கு நகரப் பகுதிகளுக்கு 200-மில்லியும் கிராமப்பகுதிகளுக்கு 100 மில்லியும் அரிசி கொடுக்கிறார்களாம். நூறுமில்லி அரிசியை எண்ணிப் பார்த்ததில் 1500 அரிசிகள் இருந்ததாம். இந்த 1500-ம் மூன்று வேளைக்கு எனத் தரப்படுகிறதாம். பாவம், மிகச் சிரமப்பட்டு எண்ணிப்பார்த்திருக்கிறார். இதுவே காங்கிரசுக்கும், அதன் 20-ஆண்டுக்கால ஆட்சியில் மகிழ்வோடிருக்கும் மக்களுக்கும் மிகப்பெரிய வெற்றி தானே!

4. மாணவர்கள் விவகாரம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

குறைகள் ஒரு துறையில்தான் என்பதில்லை. நாட்டிலுள்ள அத்தனைத் துறையிலும் ஏற்பட்டுவிட்டது. குறைகூறப்படுவதை, பொறுமையுடன் கேட்டுக்கொள்ள அரசினர் தயாராயில்லை. கூறப்படும் குறைபாடுகளில்உள்ள உண்மையை உணர்ந்துகொள்ளவும், உணர்ந்து களையவும் மிக மிக தயக்கம் காட்டப்படுகிறது. குறைகளைய வேண்டுமென்றால், மிகப் பெரும்பாலான காங்கிரஸ் அமைச்சர்கள் அல்லது அவர்களுக்காகச் செயல்படும் அதிகாரிகள் பாதிக்கப்படுவார்களோஎன்னவோ! இதயம் ஈன்றெடுக்கும் எண்ணங்களை எல்லாமே சட்டமாக்க முனைவதாலும், சட்டமாகப் பாவிக்க நினைப்பதாலுமே இந்நிலை நாட்டில் பரவலாக ஏற்பட்டிருக்கிறது. 1967 தான் இதற்கு முடிவுகட்ட வேண்டும்.

5. சென்னையில் உண்மையிலேயே நிலவரி ரத்துச் செய்யப்படுமா?

கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள். இப்போதுதான் விவகாரம் 'சூடு' பிடிக்கத் தொடங்கி இருக்கிறது. திட்டக்கமிஷன் இதுபற்றிக் கவலை தெரிவித்திருக்கிறது. ரொக்க வசதிகளை அத்திட்டம் பாதிக்கலாமென அச்சப்படுகிறது.

6. புதிய ரேஷன் கார்டுகளைப் புத்தகவடிவில் பெரிதாகக் கொடுக்கப்போகிறார்களாமே?

ஆமாம்! ரேஷன் பொருள்களின் பட்டியலை சிறிய அட்டைக்குள் அடக்க முடியாததினால் புத்தமாக்கி இருக்கிறார்கள். நாட்டு விளைபொருள்கள் என்னென்ன என்பதற்கு அதைப் பார்த்தே புரிந்துகொள்ள இலகுவாக இருக்குமல்லவா! அதோடு, இரண்டு ஆண்டுக் காலத்துக்கு அவை செல்லுபடியாகும்; அதாவது இரண்டு ஆண்டுக் காலத்துக்கு இப்படிப்பட்ட நிலை நீடிக்கும் என்று நம்பப்படுகிறது.

7. காங்கிரஸ் ஒன்றுமேவா செய்யவில்லை?

செய்திருக்கிறதே! இலட்சக் கணக்கில் இருந்த வரிவசூலகளை, கோடிக்கணக்கில் பெருக்கிக் காட்டி இருக்கிறதே போதாதா?

8. அமெரிக்க குடி அரசுத் தலைவர் யாருக்காவது நோபல் பரிசு தரப்பட்டதா?

வுட்ரோ வில்சன் 1919ல் நோபல் பரிசு பெற்றார். இவர் ஜனநாயகம் தழைத்திடத்தக்க இடமாக உலகம் ஆக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்த அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர்.

10. இலக்கணமாம் இலக்கணம்; இலக்கணம் சோறு போடுமா என்று பேசுகிறார் ஒரு காமராஜர் பக்தர், என்ன சொல்வது?

அவருக்குச் சொல்லிவிடும், இலக்கணம் கெட்டால் சோறு கூட சேறு ஆகிவிடும் என்பதை. சோறு என்பதிலே ஒரு கால் கெட்டால் என்ன கிடைக்கிறது, சேறு!! பாரதகாலத்திலேயே ஒரு சிறு இலக்கணப் பிழை ஏகப்பட்ட அலங்கோலத்தை ஏற்படுத்திவிட்ட கதை அந்த நண்பருக்குத் தெரியாது போலும். திரௌபதியுடன் வந்த அர்ஜுனன் தன் அன்னையிடம் கன்னி கொண்டுவந்திருக்கிறேன் என்று சொல்ல நினைத்து, இலக்கணம் கெட்ட முறையில் கன்னி என்பதற்குப் பதிலாக கனி என்று சொன்னதன் காரணமாகத் தானே ஐவருக்கும் பத்தினி ஆக வேண்டி நேரிட்டுவிட்டது. ஒரு புள்ளி—ஒரு கொம்பு—ஒரு கால்—கெட்டாலும் இலக்கணப் பிழை ஏற்பட்டுவிடும், தொல்லை வந்துசேரும். கல்வி என்பதிலே புள்ளி கெட்டுவிட்டால் என்ன நேரிடுகிறது. பால்என்பதிலே ஒரு கால்கெட்டுவிட்டால்என்னகாண்கிறோம். ஆபத்தானது அப்பா இலக்கணத்தைக் கெடுத்துக் கொள்ளும் காரியம் என்று சொல்லவை! அவருக்கு ரொம்பப் பழக்கமானதிலிருந்து உதாரணம் காட்ட வேண்டுமென்று விரும்பிடின், அவரையே கேள் மந்திரி என்ற கௌரவமான சொல்லிலிருந்து ஒரு எழுத்து

(16-ம் பக்கம் பார்க்க)

**சிறந்த வாழ்க்கை?**

திருந்திக்கொள்ளவேண்டும் என்று முடிவு செய்து கொண்டால், பெரும்பாலோர், இன்று தாம் இருப்பதைவிட மிகச் சிறப்பாக இருக்கலாம்.

-- டாக்டர். பிராங்க் எப். கால்ரியோ.


# காஞ்சி

மலர் 3 | 16—10—66 | இதழ் 12


# மறக்கமுடியாத மாநாடு!

**தூத்துக்குடி!**

சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன் இந்தப் பெயரை நினைத்துக்கொண்டால், நம் இதயமெல்லாம் நம்பிக்கையால் நிரம்பி வழிந்ததுண்டு. காரணம் அங்கேதான் கே. வி. கே. சாமி இருந்தார்.

அயரா உழைப்பு, அலுக்காத ஆர்வம் இவை மூலம் செயலாற்றல் என்பதற்கே ஒரு சிறப்பு இலக்கியம் படைத்துக் கொண்டிருந்த கே. வி. கே. சாமி தூத்துக்குடியில்தான் இருந்தார்.

தூத்துக்குடியிலிருந்த சாமி, தமிழகத்து மாந்தர் அத்தனைப் பேருடைய நினைவிலும் வந்து புகுந்து கொண்ட — வேதனைக்குரிய நிகழ்ச்சியை இன்றெண்ணிக்கொண்டாலும், இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கும்.

மாவட்டச் செயலாளராக—உப்பளத் தொழிலாளர் தலைவராக—ஆலைத் தொழிலாளர் தலைவராக—இன்னும், கழகத்தின் கட்டளை எதுவானாலும் மறுபேச்சின்றி செய்து முடிக்கும் செயல்வீரராகத் திகழ்ந்த கே. வி. கே. சாமி, நட்ட நடு இரவில் படுபாவிகளால் படுகொலைக்காளாக்கப்பட்ட பின்னர் —

மாவட்டத்தின் வேறு பல நகரங்களில் மாநாடுகள் நடைபெற்றிருந்தாலும், தூத்துக்குடியில் நடைபெறும், கழகத்தின் முதல் மாநாடு இதுதான் என்ற வகையில், நடைபெறவிருக்கும் இம்மாநாடு சிறப்புக்குரிய ஒன்றாகும்.

கே. வி. கே. சாமியின் பெயரை, நினைவுப் பந்தலுக்குச் சூட்டி, இந்நகரில் நாம் மாநாடு நடத்துகிறோம். இதனை நினைத்துப் பார்க்கையில், விம்முகின்ற நெஞ்சங்கள் கொஞ்சமல்ல!

விம்மலும் குமுறலும், அவரை இழந்த இந்தப் பத்தாண்டுக் காலத்தில் மட்டுமல்ல, காங்கிரசார் நாடாளத் தொடங்கிய கடந்த 19 ஆண்டுக் காலமாகவே மிகுந்துகொண்டே இருக்கிறதென்பதை, நாட்டு மக்கள்—அவர்கள் எந்த மட்டத்தவராயினும் ஒருமுகமாக ஒப்புக்கொள்கின்றனர்.

அதாவது—

நாட்டில் காங்கிரசாட்சி, அராஜகம் எழும் நிலைமையைத் தோற்றுவித்துவிட்டது;

எதேச்சாதிகாரப் போக்கை வளர்த்துக் கொண்டு விட்டது;

ஏலாத பல சட்டங்கள் போட்டு மக்களை வாட்டத் தொடங்கிவிட்டது;

தாங்கமுடியாத அளவு வரிச்சுமையை ஏற்றிவிட்டது;

'தொழில் வளர்ச்சி' என்பதன் பேரால் முதலாளித்துவத்தை வளர்த்து விட்டுவிட்டது;

திட்ட அமைப்பில், நாட்டின் எல்லாப் பகுதிக்கும் சமத்துவம் காட்டத் தவறிவிட்டது;

சமுதாயநலத் திட்டம் என்பதன் பேரால் பெருமளவு வரிப்பணத்தைப் பாழாக்கிவிட்டிருப்பது;

இந்தி மொழி ஆதிக்கத்தை நாட்டில் ஊன்றச் செய்திருப்பது

— போன்ற பல கேடுபாடுகளால் நாட்டு மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கைக்கே அல்லலுறும் நிலைமை வளர்ந்துவந்துள்ளது என்பது வெளிப்படையானது.

இக்கொடுமைகளிலிருந்து விடுவித்து, மக்களை சுபிட்ச வாழ்வு வாழச் செய்யும் புனித கடமைகளை ஆற்றுகின்ற தன்மையின் ஒரு குறிக்கோளாகத்தான், மாவட்ட மாநாடுகள் ஆங்காங்கே நடைபெற்று வருவதுடன், இக்கிழமை, தூத்துக்குடியிலும், செங்கற்பட்டிலுமாக இரு மாநாடுகள் நடைபெற உள்ளன.

இதில் மற்றுமொரு சிறப்பு, ஒரே தேதியில், தூரதூரமான இரு நகர்களில் கழக மாநாடுகள் நடைபெறுகின்றன என்றாலும், இரண்டிலும் பெரும்பான்மையான எல்லா தலைவர்களுமே கலந்துகொள்கிறார்கள்.

நெல்லை மாவட்ட மாநாடு, கடமைச் சிங்கம் கே. வி. கே. சாமியின் நினைவுப் பந்தலில், தாளமுத்து அரங்கில் நடைபெறவிருக்கிறது.

சென்னை மாநகராட்சிமன்ற மேயர் **மோசஸ்,** மாநாட்டுக்குத் தலைமையேற்கிறார்.

சட்டமன்ற உறுப்பினர் **செ. மாதவன்** மாநாட்டைத் திறந்துவைக்க இருக்கிறார்.

சாமியின் ஆற்றலை நினைவுபடுத்தும் மாவட்டச் செயலாளர் **எம். எஸ். சிவசாமி,** அனைவரையும் வரவேற்க இருக்கிறார்.

மற்றும் **நாகூர் அனீபா, சிவகங்கை சேதுராசன்,** விசயா, இவர்களது கலை நிகழ்ச்சிகள் வேறு இலட்சிய முழக்கங்களாய் அமையவிருக்கின்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க மறக்கமுடியாத இந்த மாநாட்டுக்கு, வாரீர்! வாரீர்! குடும்பத்தோடு வாரீர்! குவலயத்தைக் காக்க வாரீர்! என்றழைப்பதிலே பெருமைப்படுகிறோம்.

# ஆறிய கஞ்சி....!

கூடிய காமன்வெல்த் தலைவர்கள் முடிவு செய்ய முடியாமலே கலைந்தனர்.

சாலிஸ் பரி சென்ற வில்சனின் தூதுவர் பௌடன் வெறுங்கை யுடன் திரும்பியிருக்கிறார்.

'ஐயோ பாவம்!' என்று கன்சர் வேடிவ் கட்சியில் சிறிது அனுதாப மும் ஆதரவும் கொடுத்து வந்த பழமையாளர்கள்கூட "என்ன இருந்தாலும் இவான் ஸ்மித்துக்கு இவ்வளவு அகம்பாவம் கூடாது" என்ற திருந்திய நிலைக்கு வந்திருக் கின்றனர்.

ஆளும் கட்சியான தொழிலாளர் அமைப்பில் ரொடிஷியாவினால் பெரும் பிளவே தோன்றியுள்ளது. இந்த கிழமை பிரிட்டனில் கூடிய தொழிற் கட்சியின் வருடாந்திர மாநாட்டில் ரொடிஷியா பற்றிய வில்சனின் கொள்கையும் போக்கும் சாடப்பட்டுள்ளன; அதுவே கட்சி யின் விரிசலுக்கும் ஒரு காரணமாக வும் இருந்திருக்கிறது.

ஆனால் இத்துணைக்கும் காரண மான இவான்ஸ்மித் இருந்த நிலையி லேயே இருக்கிறார். ரொடிஷியா வில் நடப்பது அவரது சிறுபான்மை ஆட்சிதான்.

ஆங்கில நாட்டிடமிருந்து முறை தவறிய வகையில் ஆட்சியைப் பறித்த அன்று ஸ்மித் உலக அரசிய லில் ஏற்படுத்திய பரபரப்பு இன்று இல்லை.

ஏதோ உலகமே ஒன்று திரண்டு ஸ்மித்துக்கு எதிராக எழுந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது பத் திரிகைச் செய்திகளைப் படித்த போது. "விட்டுவிடுவோமா" என்ற குரல்!" எத்தனை நாளைக்குப் பார்த்துவிடுவோம்?' என்ற வீரம்.

ஏதோ அவசரத்தில் ஆட்சியைப் பறித்துவிட்டார், இதோ இன்னும் கொஞ்ச நாளில் பாருங்கள்" என்ற தொலை நோக்கு. "பிரிட்டிஷ் சும்மா விட்டு விடுமா?" என்ற சவால். "ஐ. நா. இருக்கிறதே" என்ற சமாதானம் "உலகமே ஸ்மித்துக்கு எதிராகத்தான்" என்ற கணிப்பு.

இப்படிக் கொதித்தது அப்பிரச் சினை அந்த ஓரிரு நாட்களில்.

இப்போது அதுஒரு ஆறியகஞ்சி. எனவே பழைய கஞ்சி!

கொதிப்பு அடங்கிவிட்டது; சூடு தணிந்துவிட்டது. ஸ்மித்தின் சிறு பான்மை ஆட்சிதான் பெரும் பான்மை கறுப்பர்களை ஆண்டு கொண்டிருக்கிறது. பிரிட்டனிட மிருந்து தட்டிப் பறித்த அரசைத் தான் இவான் ஆண்டுகொண்டிருக் கிறார்.

உலக நாடுகள் இருக்கின்றன; ஐ. நா. இருக்கிறது; ஆசிய-ஆப்பி ரிக்க அணி இருக்கிறது; பிரிட்டன் இருக்கிறது; கண்டனம் தெரிவித்த அத்தனைப் பேரும் இருக்கிறார்கள்.

ஆனால் இவான் ஸ்மித்தை ஏதும் செய்ய முடியவில்லை.

மலையை நோக்கி மகமது போக வேண்டும் என்பதுபோல இப் போது அவரை நோக்கி பிரிட்டன் போகிறது.

"இதோ படை; அதோ பகிஷ் கரிப்பு" இப்படியெல்லாம்மிரட்டிப் பணியவைக்க முடியாத ஸ்மித்தை இங்கிலாந்து இப்போது அரசியல் பேச்சு வார்த்தைகளின் மூலம் அணுகுகிறது.

1. உனது ஆட்சி சட்டத்துக் குப் புறம்பான ஆட்சி.

2. ரொடிஷியாவில் மக்கள் விகிதாசார முறையில் பெரும் பான்மை ஆட்சி ஏற்பட வேண்டும்.

3. அதுவரையில் ரொடிஷி யாவை பிரதிநிதித்துவம் பெற்ற ஒரு அமைச்சரவை பிரிட்டனின் கண்காணிப்பில் ஆளவேண்டும்.

என்ற இந்த மூன்று அடிப்படை களுக்கு ஸ்மித் அணு அளவுகூட இணங்க மறுக்கிறார்.

1. ரொடிஷியாவில் வெள்ளைய ருக்கே ஆளும் உரிமை இருக்க வேண்டும்.

2. மக்கள் தொகை அடிப்படை யில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்பது கூடாது.

3. இப்போதுள்ள ஆட்சியை சட்டத்துக்குப் புறம்பான ஆட்சி என்று கூறுவது தவறு.

## உலக அரங்கில்

—என்ற இந்த மூன்று நிலை களில் இருக்கிறார் ஸ்மித்.

பேச்சுவார்த்தைகளுக்காக ரொடி ஷியத்தலைநகர் சென்றபிரிட்டனின் தூதுவர் பௌடன் மூலம் வில்சன் ஒரு பெரிய சலுகை ஒன்றையும் அளித்துப் பார்த்தார்.

"பதினைந்து முதல் இருபது ஆண்டுக்காலம் வேண்டுமானால் உங் கள் ஆட்சியே இடையில் நீடிக்கட்டும் அதற்குப்பின்பாவது எங்கள் திட் டத்துக்கு உடன்பட முடியுமா?" என்று கேட்கப்பட்டது. கல்லில் நார் உரிக்க முடியவில்லை; பௌடன் தோல்வியுடன் திரும்பி னார்.

உலக அரசியலில் கொதித்துக் காணப்பட்ட தற்காலிகப்பரபரப்பு அடங்கிய நிலையில் ஸ்மித் நிரந்தர மாக ரொடிஷிய அரசைத் தோற்று வித்திருக்கிறார். பிரயாண நண்பர் கள்போல், ஒடுக்கப்பட்டிருக்கும் பெரும்பான்மையினருக்காக அன்று பரிந்து பேசியவர்களை எங்கேயும் காணமுடியவில்லை.

ரொடிஷியப் பிரச்சினைக்கு இன்று மூன்று மார்க்கங்களே உள்ளன.

1. ஸ்மித் ஆட்சிக்கு எதிராக வன்முறை உபயோகித்து அப்புறப் படுத்துவது.

2. அரசியல், பொருளாதார பகிஷ்கரிப்புகள்.

3. பிரச்னையை ஐ. நா.வுக்கு எடுத்துச் செல்வது.

படையை அனுப்பி ஸ்மித் ஆட் சியை அப்புறப்படுத்தும் திட்டம் தனக்கு இல்லை என்பதைப் பல முறை வில்சன் ஒரு கொள்கை அறிவிப்பாகவே தெரிவித்திருக் கிறார்.

பகிஷ்கரிப்பினாலும் ரொடிஷியா வின் சிறுபான்மையான ஆட்சியைப் பணியவைக்க முடியாது என்ப தற்கு இந்த இடைப்பட்ட காலத்தி லும் இடையூறுகளை உணராம லேயே ஸ்மித் ஆண்டுவந்திருப்பது ஒரு தக்க எடுத்துக்காட்டு. அது மட்டுமல்லாமல் தென் ஆப்பிரிக்கா வும் போர்ச்சுகலும் ஆரம்ப முதலே ஸ்மித்துக்கு தோள் கொடுக்கும் நண்பர்கள் என்பதனை எவரும் மறந்துவிடக்கூடாது. இந்த ஆதர வாளர்கள் தொகை இருவரிலிருந்து இன்னும் உயரக்கூடும்!

(16-ம் பக்கம் பார்க்க)

தம்பி

# ஒளிபடைத்த கண்ணினாய்!

ஐயாவோட குழந்தை!
எஜமானரோட மகன்!
சின்ன எஜமானரு!
சின்ன ஐயா!
எஜமானரு!

புரிகிறதல்லவா, ஒவ்வொருகால கட்டத்திற்கு ஏற்ற பேச்சு என்பது.

சீமான் இருக்கும்போது அவருடைய மகனை, "ஐயாவோட குழந்தை" என்று அன்புடன் கூறுவர். அந்தக் கட்டத்தில் அன்புகாட்டினால் போதும் என்று தோன்றுகிறது.


சீமானுடைய பிள்ளை, வாலிபப் பருவமடைந்ததும், அடங்கிக்கிடப்போருக்கு, முன்பு பாவ அன்புடன் குழந்தை என்று கூறிடக் கூச்சமாக இருக்கிறது; எஜமானரோட மகன்! என்று கூறுகின்றனர். அன்பு போதுமானது அல்ல என்று ஓர் உணர்வு; மதிப்புக் காட்டவேண்டும் என்ற ஒரு நினைப்பு. குழந்தை அல்ல, வாலிபன்! அதாவது சீமானுடைய பணப்பெட்டிக்கு அருகே சென்று கொண்டிருக்கும் நிலை! ஆகவே மதிப்பளித்த கவேண்டி இருக்கிறது.

ஆண்டுகள் சில செல்கின்றன! சீமான் பழையமுடுக்கை இப்போது கஷ்டப்பட்டுத்தான் மேற்கொள்ள முடிகிறது. கர்ஜனையில் கடுமை கலந்திட முடியவில்லை மகனோ? விழியை உருட்டிக் காட்டுகிறான். விரைவில் 'பட்டம்' சூட்டிக்கொள்ள இருக்கிறான் என்று தெரிகிறது. அப்போது, அன்பு - மதிப்பு—எனும் உணர்ச்சி போதுமானது அல்ல என்று தோன்றுகிறது. அடக்க ஒடுக்கமாகப் பேசவேண்டும் என்று தோன்றுகிறது; சின்ன எஜமானர்! என்று பயம் கலந்த குரலில் பேசத் தலைப்படுகின்றனர்.

பத்து நாளாக அவர் வெளியே உலாவச் செல்லவில்லை: பழரசத்தில் மருந்து கலந்து தருகிறார்களாம் களைப்பும் இளைப்பும் போக என்ற முறையில் சீமானைப்பற்றி ஊரார் பேசிக்கொள்ளும் நிலையின்போது, அவர் மகனை 'சின்ன ஐயா' என்று அழைக்கின்றனர் - ஐயா என்பதை அழுத்தி! 'சின்ன' என்ற அடைமொழி அதிக நாட்களுக்குத் தேவைப்படாது என்ற நினைப்புடன்.

சீமான் 'சிவலோகப் பிராப்தி' அடைந்துவிடுகிறார்; ஐயா! என்று மரியாதையும் அச்சமும் கலந்த முறையில் அழைக்கிறார்கள்.

'ஐயாவோட குழந்தை' என்ற நிலையிலிருந்து 'ஐயா' ஆகிவிட்டநிலை, சீமானுடைய மகன் வளர்ந்துவிட்டான் என்பதைத் தெளிவாகக் காட்டும் அளவுக்கு அவன் ஐயா வேலை பார்ப்பதற்குத் தேவையான தகுதியையும் திறமையையும் பெற்றுவிட்டான் என்பதைக் காட்டுவதில்லை. தகுதியும் திறமையும் பெறறிருக்கக்கூடும்; அல்லது மாளிகையும் மாநிதியும் போதும், வேறு தகுதியும் திறமையும் தேடிப்பெற்றிட வேண்டுமோ என்று இருந்துவிட்டிருக்கக்கூடும்.



# உயர இருப்பதால் உயர்ந்திடுமா என்ன?

மாளிகையும் மாநிதியும் பெற்றிருப்பதே ஒருவிதமான தகுதிதானே—உலகம் அப்படித்தானே எண்ணுகிறது.

எஜமானர்! ஐயா! பெரியவர்! — என்ற இத்தகைய பட்டம் பல சூட்டப்பட்டவர், சீமான் மகன்-இருபது வயது நிரம்பியவனாகவும், 'எஜமானர்' என்று பணிவுடன் அழைப்பவர் அறுபது வயதான முதியவராகவும் இருக்கக்கூடும்!

வயது இருபது என்றால் என்ன! இரும்புப்பெட்டி இருக்கிறதல்லவா? முதியவர் அந்த வாலிபனையா எஜமானரே! என்று அழைக்கிறார்? இரும்புப் பெட்டியையும் அதில் உள்ள எண்பது இலட்சத்தையும், கரும்புத் தோட்டத்தையும் அது காட்டும் கணக்கினையும்!!

தம்பி! இது ஏழ்மையின் விளைவு.

ஆனால், அரசியல் உலகிலே, ஒருவர் திடீரென 'எஜமானர்' ஆகிவிடும்போதும், இதுபோல 'வளையும் நெளியும்' கூட்டமொன்று கிளம்பிவிடக் காண்கின்றோம்.

உண்மையான அன்பு காரணமாக, எதையும் இழந்திட, எத்தகைய இன்னலையும் ஏற்றிடத் தயாராக உள்ள தூயவர்களைத் தொண்டர்களாகப் பெற்றிடும் வாய்ப்பினைப் பெற்றிடும் தலைவர்கள் உளர்.

அந்தத் தலைவர்களைவிட தூய்மைமிக்க அந்தத் தொண்டர்களே, பொதுவாழ்க்கைத் துறைக்கு உயிரூட்டம் தருபவர்.

நான், தம்பி! அப்படிப்பட்ட அப்பழுக்கற்ற நற்குணம் கொண்ட தூயவர்களைப்பற்றி அல்ல கூறுவது.

சீமானான உடன் அவனை 'எஜமானர்' என்று கொண்டாடிடுவோர்போல, ஒருவர் அரசியலில் பெரிய பதவியில் இடம்பெற்ற உடன் அவர் முன்நின்று அவர் நாமாவளி பாடுகிறார்களே அவர்களைக் குறிப்பிடுகிறேன்; துதிபாடகர்களை.

துதி பாடகர்கள் வரம்வேண்டி புதிய தேவதைமுன் வேண்டி நிற்பது மட்டுமின்றி மற்றவர்களிடம் மல்லுக்கு நிற்பதும் மற்ற எவரையும் மட்டமாகக் கருதி ஏசுவதும், தமது புதிய எஜமானருக்குத் திருப்தி தரும் என்ற நினைப்பில் இருப்பர்.

தன்னைப் பாராட்டிப் பேசுவதுடன், தனக்கு 'ஆகாதவர்களை' கடுமையாக ஏசுகிறான் என்பதறிந்து அகமகிழ்ந்து, தட்டிக் கொடுக்கும் போக்கினர் உளர்.

'தலைவர்' மகிழ்ச்சி அடைகிறார், தட்டிக் கொடுக்கிறார் என்று தெரிந்தால், தூற்றும் பேர்வழிகளுக்குத் தெம்பும் துணிவும் பன்மடங்கு அதிகமாகிடத்தானே செய்யும். வசை பாடுவதிலே மும்முரமாக ஈடுபட்டுவிடுகின்றனர்! அதிலேயே ஈடுபட்டு ஈடுபட்டு, பிறகு வேறு எதற்குமே தகுதியற்றவர்களாகிவிடுகின்றனர்.

தம்முடன் உள்ளவர்கள் பிரச்சினைகளை விளக்க வேண்டும், வாதங்களைக் காட்டவேண்டும், புள்ளி விவரத்தைத் தரவேண்டும், பேச்சிலே பொருளும் பொறுப்பும் இருக்கவேண்டும், கண்ணியம் இருக்க வேண்டும் என்று விரும்பிடுவது, ஒரு தலைவரின் தரத்தை மட்டுமல்ல, பொதுத்தொண்டின் தரத்தையே உயர்த்தும்.

அதற்கு மாறாகத் தரம்கெட்ட பேச்சுக்குத் தலையாட்டுவதும் தட்டிக் கொடுப்பதும், தூபமிடுவதுமாக அந்தத் தலைவர் இருந்திடின், என்ன நேரிடும்? சாக்கடைச் சரக்கினை நாக்கிடைகொண்டு, உமிழ்வோரின் தொகை பெருகும், துணிவு வளரும். இன்று அதனைத்தான் காண்கிறோம்.

தேர்தல் நெருங்க நெருங்க, இழிமொழிகள் உமிழ்வோர் கும்பல் கும்பலாகக் கிளம்புவர். ஆந்தை அலுத்துவிட்டது கோட்டான் தோற்றுவிட்டது என்று கூறத்தக்க விதமான 'ஒலி' கிளம்பிடும்; காது குடைச்சல் எடுத்திடும் விதமாக. கவலையோ, கோபமோ துளியும் ஏற்படவிடக்கூடாது.

தரமற்றவர்கள், கீழ் நிலையில் உள்ளவர்கள் எதையோ பேசட்டும், எப்படியோ ஏசட்டும் அண்ணா! மேல் நிலையில் உள்ளவர்கள், உயர்ந்த பதவியில் இருப்பவர்கள், தலைவர்கள் பீடத்தில் அமர்பவர்கள் இவர்களெல்லாமோ, இழித்தும் பழித்தும் பேசுவது, இட்டுக் கட்டிப் பேசுவது என்று கேட்கிறாய். கேள்வி, நியாயமானதுதான் தம்பி! ஆனால் சற்று அவசரப்பட்டுக் கேட்டுவிட்டாய்.

உயர இருப்பதெல்லாம் உயர்ந்தது என்று யார் உனக்குச் சொன்னார்கள்.

தாழ இருப்பதெல்லாம் தாழ்ந்தது என்று ஏன் கருதிக்கொள்கிறாய்.

பூமியின் கீழே, மிக மிகக் கீழே கிடைத்திடுகிறது வைரம்! உயரத்தில் அல்ல!! எனினும் வைரம் உயர்ந்த பொருள்!! கட்டுவிரியன் குட்டி! மரத்தின் உச்சாணிக் கிளையிலே போய் இருந்துகொண்டால், மிக உயர்ந்ததாகிவிடுமோ? ஆகாதன்றோ!

உயரம்—தாழ்ந்த இடம்—மலை—மடு—சரிவு,—பள்ளத்தாக்கு—சம நிலம்—இவை, இடங்களின் அமைப்பைக் குறிக்கின்றன; தரத்தை அல்ல. ஆகவே உயர்ந்த இடம்—மேலான பதவி—இங்கு உள்ளவர்களெல்லாமோ, இழிமொழி பேசுவது என்று கேட்டுக் கவலைப்பட்டுக்கொள்ளாதே.

இடமும் இயல்பும் பொருந்தி இருந்துவிடுவது, இலட்சத்தில் ஒன்று இருக்கலாம்.

இடத்திற்குத் தக்க இயல்பு பெற்றிட முனைபவர், பதினாயிரத்தில் ஒருவராக இருக்கலாம்.

ஆனால் உயர இருப்பதனைத்தும் உயர்ந்தது என்று பொது இலக்கணமாக்கிடக் கூடாது.

உயர்ந்த இடத்திலுமா இப்படிப்பட்ட இயல்பினர் உள்ளனர் என்று கூறினால், பொருளுண்டு.

உயர்ந்த இடம் அடைந்தபிறகாவது, தமது இயல்பினைச் சிறந்ததாக்கிக்கொள்ளக்கூடாதா, உயர்ந்த இயல்பினைப் பயின்றுகொள்ளக்கூடாதா என்று கேட்கத் தோன்றும். அது நல்ல கேள்வி. ஆனால் நடைமுறை வேறுவிதமாக இருக்கிறதே, என்னசெய்ய!

வேறோர் விந்தை இதிலே என்ன என்றால், தம்பி! உயர்ந்த இடம் சென்ற காரணத்தாலேயே, ஒரு 'துணிவு' பிறந்துவிடுகிறது எதையும் பேசலாம், எப்

# ஆற்றல் உணர்ந்தோ போற்றுதல் செய்கிறார்

படியும் பேசலாம் என்று. நாமிருக்கும் இடமோ, மிக உயர்ந்த இடம், நம்மை யார் என்ன செய்யமுடியும், இந்த உயர்ந்த இடத்தில் இருந்துகொண்டு எவரை என்ன கூறினாலும் அவர்கள் இடத்தின் உயர்வுகண்டு, அச்சம்கொண்டு, அடங்கிக்கிடப்பர்! — என்று எண்ணிக்கொள்ளும் போக்கு தடித்துவிடுகிறது.

பெரும்பாலான மக்கள், உயர் இடம் சென்றுள்ளவர்களைக் கண்டதும், அச்சம்கொள்வதும், அவர்களைப் போற்றிடத் துடிப்பதும், அவர்களின் பேச்சிலே புதுப்புது பொருளும் பொலிவும் அருமையும் பெருமையும் இருப்பதாக எண்ணி மயக்கம் கொள்வதுமான நிலையில் உள்ளனர்.

உயர்ந்த இடம் செல்வதற்கு முன்பு அவரிடம் காணமுடியாதிருந்த 'அறிவாற்றலை' உயர்ந்த இடம் சென்றதும், காண முற்படுகின்றனர்! இருப்பதாகவே கூறுகின்றனர்! நம்புகின்றனர்!

காமராஜர், தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்தபோது அவரைப்போற்றிப் புகழ்ந்திட, தமிழ்நாட்டிலேயே கற்றோரும் மற்றோரும், கனதனவான்களும் புலவர் பெருமக்களும், அதிகாரிகளும் வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் வணிகப் பிரமுகர்களும் கல்லூரிப் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும், துடி துடித்துக் கொண்டா திரண்டுவந்தனர்.

**ஒரு பரிதாபம் கலந்த பரிவுகாட்டினர்.**
**போற்றிப் புகழ்ந்திட முன்வந்தார் இல்லை.**

ஆனால், அந்த நிலையா இன்று? கற்றோரும் மற்றோரும் இன்று என்னென்னமோ அறிவாற்றலைக் காண்கின்றனர், காமராஜரிடம்! போற்றிடத் துடிக்கின்றனர்! படிக்காத மேதை என்றும் பாமரரின் பிரதிநிதி என்றும், மக்களை அறிந்தவர்என்றும் மனப்பாங்கு உணர்ந்தவர் என்றும். பிரச்சினைகளை விளக்குபவர் என்றும் சிக்கல்களைத் தீர்ப்பவர் என்றும், எழுச்சி ஊட்டுபவர் என்றும் செயலில் தீரர் என்றும், பாராட்டுகின்றனர்.

**தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக அவர் இருந்தபோது அவர்மீது பொழியப்படாத இந்தப் புகழ்மாரி, அவர் முதலமைச்சராகி அகில இந்தியத் தலைவராகி, அமைச்சர்களை உண்டாக்கித் தரும் 'சிற்பி' என்ற நிலைபெற்றவரானதும், வேகமாகப் பொழியப்படுகிறது காண்கிறோம்.**

**போற்றுவாரற்று அவர் இருந்த நாட்களுக்கும், போற்றுதார் இல்லை என்று கூறத்தக்க இந்த நாட்களுக்கும் இடையில், அவர் தமது அறிவாற்றலை மிகப் பெரும் அளவு வளர்த்துக் கொள்ள நேரமோ, வாய்ப்போ, முறையோ இருந்ததாக அவருடைய துதிபாடகர்கள் கூடக் கூறமாட்டார்கள்!**

**ஆனால் அவர் உயர் இடம் சென்றார், போற்றிடுவோரின் குரல் உயர்ந்தது!**

இடத்தின் உயர்வுகண்டு அதிலே உள்ளவர்களைப் போற்றிப் புகழ்ந்திட முற்படும்போக்கு, இன்று நேற்றல்ல, நெடுங்காலத்துப் பழக்கம்.

புகழுரை கேட்டுக்கேட்டு, உயர் இடம் சென்றடைந்தவர்கள் முதலில் மகிழ்கின்றனர், பிறகு மயங்குகின்றனர், பிறகு மமதை அடைகின்றனர், இறுதியில், புகழுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் அருங்குணங்கள் அனைத்தும் தமக்கு உண்மையிலேயே இருப்பதாக நம்பிக்கை கொண்டுவிடுகின்றனர். அந்த நம்பிக்கை தடித்துவிட்டால், எவரேனும் தன்னிடம் ஒரு சிறு குறை இருப்பதனை மிகப் பணிவுடன் சுட்டிக்காட்டிடினும் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை; பொங்கிஎழுவர்! யார் அவன்! அவனுக்கு என்ன தெரியும்! என்னதகுதி அவனுக்கு இருக்கிறது! — என்று முழக்கமெழுப்புவர்.

அந்த நிலைக்குச் சென்றுவிட்டவர்கள், பிறகு எதையும் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கூட ஒப்புக்கொள்வதில்லை. எல்லாம் எளிதாக அவர்களுக்குத் தென்படும். எதையும் முடித்துவிடமுடியும் என்ற துணிவு பிறந்திடும். அது இறுதியில் அவர்களை எங்கு துரத்திடும் என்பதனை வரலாற்று ஏடுகளில் பல நிகழ்ச்சிகள் விளக்குகின்றன.

**அழாதே! ஏதோ ஆத்திரத்திலே அடித்துவிட்டேன். பொறுத்துக்கொள்; புத்திகெட்டு அடித்துவிட்டேன்.**

**அடிக்காமல் விட்டுவிட முடியுமா! நீ செய்த வேலைக்கு இந்த அடி போதாது. நானாக இருக்கவே இந்த அளவோடு விட்டுவிட்டேன். வேறு ஒருவனாக இருப்பின் முதுகுத்தோலை உரித்து உப்பு தடவி வெயிலிலே உருட்டிவிடுவார்கள் உன்னை. பயல், தப்பித்துக்கொண்டாய், போ! போ!!**

**காரணம் தெரிவிக்கவேண்டுமோ, பயலுக்கு! அடித்தேன்! ஏன் என்று கேட்கிறாய். ஏன் என்று கேட்டதற்கே மற்றோர்தடவை உன்னைக் கட்டிவைத்து அடிக்கவேண்டும்......**

தம்பி! செல்வச் செருக்கின் வளர்ச்சியிலே, ஒவ்வொரு கட்டத்தில் இவ்விதம் ஒவ்வொரு விதமாகச் 'சீமான்' பேசுகிறார் அல்லவா! உயர்ந்த பதவி பெறப் பெற, சிலருக்கு இந்தச் 'சீமான்' போக்கு தடித்துப் போய் விடுகிறது.

அந்தப் போக்குக்கு முதற் காரணமாக அமைவது, உயர்ந்த இடம் சென்றுவிட்டவர்களை, பொருத்தமும் பொருளும்கூடப் பாராமல், போற்றிப் புகழ்ந்திட ஒரு கூட்டம் கூடிவிடுகிறதே அதுவேதான்!!

உயர்ந்த இடம் சென்று விட்டவர்கள், இனியாகிலும் உயர்ந்த குணம் பெற்றுக்கொள்ளுவோம் என்று முயற்சி எடுத்துக்கொள்ளக்கூடும்; அந்த முயற்சியே தேவையில்லை என்று இந்தத் துதிபாடகர்கள் முட்டுக்கட்டை போட்டுவிடுகின்றனர்.

தன்னை, பல்வேறு துறைகளிலே உள்ளவர்கள்,

**எல்லாம் இவர் அறிவார்!**

என்று போற்றிப் புகழ்ந்திடக் கேட்டால்,

**எதையும் இனி நாம் தெரிந்துகொள்ளத் தேவை இல்லை**

என்ற எண்ணம் எப்படி வளராமல் போய்விடும்! அந்த எண்ணம் வரத்தான் செய்யும்.

அடுத்தக்கட்டமாக அமைவது மேலும் வேடிக்கையானது.

# எடுத்துக் கொடுக்கும் இடத்தை எட்டினர்!!

**புகழ்பவர்கள்**
**புரிந்தவர்கள்;**
**புகழாதவர்கள்**
**புத்திகெட்டவர்கள்**

என்ற புது இலக்கணத்தையே உயர் இடம் சென்று 'துதி பாடகர்'களைப் பெற்றுக் கொண்டவர் ஆக்கிக் கொள்கிறார்.

மருத்துவர்கள் கூறிடும் முறைகளை அவர் மறுப்பார்; மருத்துவர்கள் வாய் பொத்திக் கொள்வர்; அவர் அறியாரா? அறிந்துதான் கூறுகிறார்! ஏடுகளிலே உள்ளவற்றை நாம் கூறுகிறோம்; அவரோ, அவருடைய அறிவினால் ஆராய்ந்து பார்த்துக் கூறுகிறார்; அவருடைய சொல்லை மறுத்துப் பேசிட நாம் யார்! அவருடைய நிலை என்ன, ஆற்றலென்ன! அறிவென்ன! அவருக்குள்ள தகுதி என்ன! திறமை என்ன! அவருக்கு முன் நாம் எம்மாத்திரம்! அவர் நட்சத்திரம், நாம் மின்மினி!—என்று கூறுவர்; ஒப்புக்கு அல்ல; உண்மையாகவே அவ்விதம் நம்பிக் கொண்டே பேசுகின்றனர்.

> **அவ்விதம் பேசுபவர் ஆதாயமும் அடைகின்றனர். ஆதாயம் சுவை அளிக்கிறது. அந்தச் சுவை அவர்களை மேலும் புகழ் பாடச் செய்கிறது. அஃது ஒரு கலையாகவே வடிவம் கொள்கிறது.**

ஆதாயம் பெறவே பலரும் தன்னைப் புகழ்கிறார்கள் என்பது முதலிலே புரிகிறது, பிறகு அதுகூட மறந்து போய்விடுகிறது, போற்றுதலைப் பெற்றுப் பழக்கப்பட்டுப் போய்விட்டவருக்கு.

> இவ்வளவு பேர் புகழ்கிறார்கள்; போற்றுகிறார்கள்; பின்பற்றுகிறார்கள்; பணிந்து கிடக்கிறார்கள்; ஆனால்! இந்தச் சிறு கூட்டம் மட்டும் நம்மிடம் குறைகாண்கிறதே, எதிர்க்கிறதே! என்ன துணிவு! என்ன ஆணவம்! இதுகளை விட்டு வைக்கலாமா; கூடாது! கூடாது! ஒழித்துக்கட்டியாக வேண்டும்!—

என்ற எண்ணம் முளைத்துவிடுகிறது; அதன்படி திட்டமிட முனைகிறார்.

இதற்கான திட்டத்திலே முதற்கட்டம் தன்னிடம் பணியாது இருப்பவர்களிலிருந்து ஒரு சிலரையாவது அச்சமூட்டியோ ஆசை காட்டியோ தன் பக்கம் இழுத்துக் கொள்வது.

> **மரத்தை வெட்டப் பயன்படும் கோடாலிக்குக் காம்பு வேண்டுமல்லவா! அந்தக் காம்பினை, மரத்திலிருந்துதானே தயாரிக்கிறார்கள்; அது போலத்தான்.**

திட்டத்தின் இந்தக் கட்டத்தின்போது, புதுத் துதி பாடகர்கள் தயாரிக்கப்படுகின்றனர்.

தம்பி! துதிபாடகர்களைத் தயாரித்துக்கொள்ளும் கட்டம் இருக்கிறதே, அப்போது உயர் இடம், மெத்தப் பயன் அளிக்கிறது. சுவையுள்ள பண்டங்களைத் தர முடிகிறதல்லவா, துதி பாடகர்களுக்கு!!

> ஐயோ! அந்த ஆசாமியா! அந்த ஆளிடம் பேசினாலே ஆபத்து! போலீஸ் சந்தேகப்படும். நமக்கு ஏன் வீண் வம்பு.

என்று இதே காமராஜர் குறித்துப் பேசிய சீமான்கள் தானே, சுயராஜ்யம் அமைந்த பிறகு, காமராஜர் பெரும் பதவி வகித்திடத் தொடங்கிய பிறகு—

> ஐயாவா! வரணும், வரணும்! தங்கள் சித்தம் என் பாக்கியம். என்னால் என்ன காரியம் ஆகவேண்டும் சொல்லுங்கள்; செய்யச் சித்தமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

என்று பேசத் தொடங்கினர். காரணம்? காமராஜர், ஒரு மாபெருந் தலைவருக்குத் தேவைப்படும் அறிவாற்றல் பெற்றவர் என்பதனை இப்போதுதான் உணர்ந்து கொண்டனரா, உல்லாசபுரியினர்...? இல்லை! இப்போதுதான், உல்லாசபுரியினருக்கு உதவி செய்திடும் இடத்திற்குக் காமராஜர் வந்திருக்கிறார், என்ற காரணத்தால்.

துவக்கத்தில் துதிபாடகர்களைத் தடுத்திடவும், இத்தனை ஆராதனையும் அர்ச்சனையும் தமக்குத் தேவை இல்லை என்ற உணர்வும், மிக அதிகமாகத் தம்மைப் பாராட்டுகிறார்கள் அது கூடாது, அதனை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்ற அடக்க உணர்ச்சியும் தோன்றுகிறது.

> துதிபாடகர்கள் பற்றி சந்தேகமேகூட எழுகிறது.
>
> துதிகேட்டு, மனதைக் கெடுத்துக்கொள்ளக்கூடாது என்று தோன்றுகிறது. தடுக்க முயலுவர்.

வேண்டாமப்பா இந்த வீண் புகழ்மாலை என்றும், நான் ஏமாளி அல்ல உன் பாராட்டுதலை உண்மை என்று ஏற்றுக்கொள்ள என்றும் சொல்லும்போது கூட, பாராட்டுதலைப் பெற்றதிலே கிடைத்த தனி மகிழ்ச்சி இருக்கிறதே அது குறைவதில்லை. சொல்லப் போனால், மகிழ்ச்சி வளருகிறது.

**கொடுப்பவன் எதையும் இழப்பதில்லை** என்ற பேச்சு வேதாந்தத்தில் என்ன பொருள் தருகிறதோ தெரியாது. ஆனால் ஒருவரை மற்றொருவர் பாராட்டுவது இருக்கிறதே அதைப் பொறுத்தவரையில், கொடுப்ப

## ஆட்சியினை

மணிமணியாய் விளைகின்ற நிலத்தில் கூட
மாற்றுகின்றோம் வேறுவிதை! போட்டிருக்கும்
துணிமணிகள் பழையதெனில் புதிது கொள்வோம்!
துணிகின்றோம் மதம்கூட மாறுதற்கு!
அணிகலன்கள் ஆண்டுசில கழிந்த பின்பு
அதைஅழித்துப் புதியபொருள் ஆக்குகின்றோம்!
பிணிநீங்க மருந்துகளை மாற்றுகின்றோம்!
பசிச்சாவு ஆட்சியினை மாற்றினோமா?

தின்னுகின்ற பொருள்களைநம் நாக்கிற்கேற்ப
தினந்தோறும் மாற்றுகின்றோம்! பழக்கப் பட்ட
மண்வெட்டி மரக்கலப்பை மாடு எல்லாம்
மாற்றுதற்கு மனமாற்றம் உண்டே! இந்த
பண்டாரத் திருவோட்டு ஆட்சி மாற்றிப்
பார்த்தோமா? பட்டினியைப் போக்கினோமா?
கண்டதென்ன காங்கிரசு ஆட்சி தன்னில்?
காட்டுமொழி பொதுமொழியாய் ஆனதன்றி?

# புகழைப் பாடிட புதியவர் தேடுவர்

வன் எதையும் இழப்பதில்லை என்பது பெருமளவு உண்மை.

அவர் குணத்திலே தங்கம், அறிவுத் தெளிவிலே வள்ளுவன், பற்றற்ற தன்மையிலே புத்தன், என்று பாராட்டுவதாலே பாராட்டுபவனுக்கு என்ன நட்டம்! சொல்லப்போனால் ஒரு விதமான ஆதாயம் கிடைக்கிறது என்றும் கூறலாம். எவர் இவருடைய பாராட்டுதலைப் பெற்றாரோ அவர் 'நாலு பேரிடம் இவர், வள்ளுவனையும் புத்தனையும் நன்றாகக் கற்றறிந்தவர், எதையும் எடைபோட்டுப் பார்த்துதான் பேசுவார்', என்று சொல்லிவைப்பார் அல்லவா!

ஆகவே கொடுப்பவர் எதையும் இழப்பதில்லை என்பது மட்டுமல்ல, கொடுப்பவர் ஏதாகிலும் பெறுவார் என்றே கூடக் கூறலாம். அது சிற்றுண்டியாக இருக்கலாம், சிறு கடன் தொகையாக இருக்கலாம் அரிய பொருளாக இருக்கலாம், வசதியான வேலையாக இருக்கலாம், பெறுவது எத்தனையோ வடிவத்தில் வகையில் இருந்திடக் கூடும்; இடத்திற்கும் நேரத்திற்கும் தக்கபடி.

கொடுப்பவர் இழப்பதில்லை என்பதை ஒப்புக்கொள்வோம்; ஆனால் பெறுபவர்? அதிலேதான் வேடிக்கை இருப்பதாக எனக்குப் படுகிறது; பலரும் இந்தக் கருத்துக்கொண்டுள்ளனர்.

புகழ்மொழியைப் பிறர் கூறக்கேட்டு மகிழ்ச்சி கொண்டிடும் பழக்கம் வளர வளர, ஏதேனும் சிலவற்றில், எவரேனும் சில பேர்கள், எப்போதோ சில வேளைகளில், புகழ்மொழி வழங்காது போயிடின், புகழ்மொழி கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டுள்ளவர், என்றுமில்லாத மனப்புழுக்கம் கொண்டுவிடுகிறார். ஏதேதோ ஐயப்பாடுகள்! அச்சம்! அருவருப்பு! பகை உணர்ச்சியேகூட!

சே! இந்த மாந்தரின் இயல்புதான் என்ன! எத்தனை 'வர்ணஜாலம்' காட்டி என் தோகையை விரித்து ஆடுகிறேன்! கண்டு சொக்கி நிற்பார்கள் என்று!! பார்த்துவிட்டு ஒருகணம் புன்சிரிப்பு உதிர்த்துவிட்டு அவனவன் அவனவனுக்கு உள்ள வேலையைக் கவனிக்கச் சென்றுவிடுகிறானே! என் நடனம் நயனங்களுக்கு விருந்து என்று கவிகள் பாடியுள்ளனர். ஓவியம் தீட்டியுள்ளனர், எனினும் பாவேன் கலைரசம் அற்றவனே; என்னைக் கண்டான் ஒருகணம். பிறகோ காளையை ஓட்டிக்கொண்டு கழனி சென்றுவிட்டான், சேற்றிலே சந்தனம் காண!—என்று மயில் கருதிக்கொள்கிறதோ என்னவோ, 'முகஸ்துதி' கேட்டுக்கேட்டு மகிழ்ச்சி மது உண்டுவிட்டவன், ஒருவேளை அது கிடைக்காவிட்டாலும் சலிப்பும் மனக்களைப்பும் கொண்டுவிடுகிறான்; அதனால், தனக்குத் தேவைப்பட்டிடும் மகிழ்ச்சியை, இன்பத்தை எப்போதும் பெற்றிடவேண்டும் என்பதற்காக, புகழ் பேசுபவர்களைத் தயாராக வைத்துக்கொண்டிருக்க வேண்டி நேரிடுகிறது; எப்போதும் புகழ்பாடியபடி அவர்கள் இருக்கவேண்டுமானால், அவர்களை 'கவனித்துக்கொள்ள' வேண்டி வருகிறது! அந்தக் கட்டம் மேலும் வளராமலிருப்பதில்லை. புகழ் பாடுபவர்களைக் கவனித்துக்கொள்ளவும் தயாராக வைத்துக்கொண்டிருக்கவுமான கட்டத்திலிருந்து, புகழ் பாடிகளைத் தயாரிக்கவே வேண்டி வருகிறது. ஓட்டலில் பாடப்படும் கிராமபோன் இசையைக் கேட்டுக் கேட்டு பழகிவிடுபவன், தன் இல்லத்திலேயே அந்த இசையைப் பெற வழி தேடிக்கொள்ள முயற்சிப்பது போல, புகழ் பேசுவோர் பேசி வது கேட்டு மகிழ்ச்சி பெற்று, அதிலே மயங்குபவன் பிறகு புகழ் பேசுவோரையே தயாரிக்க வேண்டிய கட்டம் சென்றுவிடுகிறான். அதிலே இயல்பாக உள்ள உயர்வு இல்லை என்றாலும், எப்போதும் கிடைக்கிறது. தட்டாமல் தயங்காமல் கிடைக்கிறது, கெகிட்டும் அளவு கிடைக்கிறது என்பதிலே ஒரு திருப்தி கிடைத்திடத்தான் செய்யும். ஆனால் அதற்காக ஆகிடும் செலவு! அதற்காக எடுத்துக்கொள்ளப்படவேண்டிய சிரமம்! அதனைக் கணக்குப் பார்க்கும்போது, பெறுபவன் இழக்கிறான் என்று கூறிவிடலாம்; கணக்கு அதைத் தெளிவாகக் காட்டுகிறது.

கணக்கு அந்த அளவோடு நிற்பதில்லை. மது குடித்துப் பழக்கப்பட்டுப் போய்விட்டவனுக்கு வேறு எதிலேயும் அந்த இனிப்பும், விறுவிறுப்பும் கிடைப்பதில்லை என்பதால், வேறு எந்தவிதமான பானத்தையும் விரும்பமாட்டான் என்கிறார்கள். அந்த 'விறுவிறுப்பு' கிடைக்காதபோது எல்லாவற்றையுமே இழந்துவிட்டது போன்ற ஓர் ஏக்கநிலை பிறந்துவிடுகிறது. இந்தத் துறையிலே எல்லாம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள், மது பருகிப் பருகிப் பழக்கத்தை அழுத்தமாக்கிக்கொண்டவர்களுக்கு, சிலகாலம் கழிந்த பிறகு வழக்கமாகப் பருகிவருவது போதுமானதாகப் படுவதில்லையாம்; அதைவிட அதிக 'விறுவிறுப்பு' உள்ளது வேண்டும் என்று தவியாய்த் தவிக்கிறார்களாம். உண்மையோ அல்லவோ தெரியவில்லை, எல்லா விதமான மது வகைகளையும் பருகியான பிறகு 'தவிப்பு' மேலிட்ட நிலை சென்றவர்கள், ஏதோ ஓர் வகையான பாம்பின் விஷத்திலிருந்து தயாரிக்கப்பட்டதை நாவில் தெளித்துக்கொண்டு போதுமான போதை பெறுகிறார்களாம். இது மிகைப்படக் கூறப்பட்டதாக இருக்க

(13-ம் பக்கம் பார்க்க)

## மாற்றினோமா?

பண்பாட்டை பழக்கத்தை மாற்றிக் கொண்டு
பறக்கின்றோம் மேல்நாட்டுப் பழக்கந் தன்னில்!
உண்ணுகின்ற சோற்றையேநாம் மாற்றிக் கொண்டு
உடைக்கின்றோம் கோதுமையை வாயில்போட்டு!
கண்போன்ற தமிழ்மொழிக்கு ஆட்சி இன்றி
காட்டுமொழி இந்திக்கு ஆட்சி கண்டோம்!
குண்டர்களின் ஆட்சியினை மாற்றினோமா?
குடல்காயும் வறுமையினைப் போக்கு தற்கே!
இதுவரைக்கும் பொதுமொழியாய் இருந்து வந்த
இணைப்புமொழி ஆங்கிலத்தை எடுத்து விட்டு
புதுமொழியை புன்மொழியை இந்தி தன்னை
புகுத்திட்டார் ஆட்சிமொழியாக்கிக்கொண்டார்
எதுஎதுவோ மாற்றங்கள் செய்து கொண்டார்!
ஏழைக்கு வாழ்வுண்டா? மாற்றம் உண்டா?
புதுவாழ்வு பொன்வாழ்வு தேவை என்றோம்!
பெருச்சாளி கறியாட்சி மாற்றினோமா?

— புலவர். மணிமுடிச்சோழன்




## 2–20
## பொன்னையாவின் புதையல்!

கல்லால் அடிப்பவள் செந்தாமரை என்பதை அறிந்ததும் தூமகேதுவின் மனதில் பற்பல உணர்ச்சிகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டெழுந்தன.

"செந்தாமரையும் நமக்கு விரோதியாகிவிட்டாளா?" என்ற ஐய உணர்ச்சி மற்ற உணர்ச்சிகளை கீழே போட்டு மிதித்துக்கொண்டு மேலெழுந்து நின்றபோது ஐயோ என்று செந்தாமரை பயந்து அலறிக்கொண்டே அவனை நோக்கி நடையும் ஓட்டமுமாக வந்தாள்.

"செந்தாமரை! எதற்காக இப்படி நடுங்கி நிற்கிறாய்!" என்று கோபத்தை வெளிக்காட்டாமல் சாந்தமான குரலில் தூமகேது கேட்டபடி அவளது முகத்தைப் பார்த்தான்.

"கல்–கல்...கல்..." என்று நாக்குழற, கண் மிரளத் தடுமாறினாள் செந்தாமரை.

"கல்! ஆமாம்! சரியாகக் குறி தவறாமல் என் முதுகில்தான் வந்து விழுந்தது!" என்று வெறுப்பும் ஏளனமும் கலந்த குரலில் தூமகேது சொல்லிவிட்டு கையிலிருந்த எழுத்தாணியின் முனையைத் தடவிப் பார்த்தான்.

"நான்......நான்...–"

செந்தாமரையின் வாயினின்றும் வார்த்தைகள் வெளிவரப் பயந்தன. கவிழ்ந்த தலையை நிமிர்த்தாமல், தரையைப் பார்த்தபடி நின்றாள்.

"இன்னும் என்ன கீழே தேடுகிறாய்?" என்று குனிந்து ஒரு கல்லைக் கையில் எடுத்து 'இந்தா! நானே எடுத்துத் தருகிறேன்! அடி! என் முகத்தைப் பார்த்து இந்தக் கல்லால் அடி! ஓங்கி அடி! குச்சு வீட்டில் கிடந்ததுகளை எல்லாம் மச்சு வீட்டில் வாழவைத்தேனே — எனக்குத் தண்டனை வேண்டாமா? குப்பையில் அழுகிக் கொண்டிருந்ததுகளை கோபுரத்தின் உச்சியில் ஏற்றிவைத்து அழகு பார்த்தேனே-அதற்காக எனக்குத் தண்டனை வேண்டாமா?" என்று சினத்தோடு சீறினான்.

"என்னை மன்னிக்க வேண்டும்!"

"நீ வீசிய கல், படாத இடத்தில் பட்டு, உயிர் போய்விட்டிருந்தால், இந்நேரம் நான் கடவுளிடம் மன்னிப்புக் கேட்கவேண்டியிருக்கும்—உன்னைப்போன்ற பித்தளைகளைப் பொன்னாக்கிய பாவத்திற்காக!"

தாங்கள் இவ்வளவு ஆத்திரத்தோடு பேசினால் என்னால் எப்படிப் பேச இயலும்? நான் எத்தகைய குணங்கொண்டவள், தங்கள் மீது எவ்வளவு விசுவாசமுள்ளவள் என்பவற்றைத் தாங்களே நன்றாக அறிவீர்கள்! அப்படிப்பட்ட நானா, தங்கள் மீது கல்லை எறிவேன்? நான் எங்கோ கிடந்தவள்-எனக்கு ஏற்றமளித்தீர்கள்! சமுதாயத்தின் ஒரு ஓரத்தில் ஒட்டிக்கிடந்தவளை, அரசாங்கக் கௌரவங்களுக்கு உரியவளாக்கினீர்கள்! பித்தளையைத் தங்கமாகியதாகச் சொன்னீர்! நான் பித்தளை கூட அல்ல — சாதாரண ஒரு கண்ணாடிக் கல்! அந்தக் கண்ணாடிக் கல்லை மாணிக்கக் கல்லாக்கியது தாங்கள்தான்! அந்த நன்றியை நான் எப்படி மறக்கமுடியும்? மறந்தால் இந்தப் பூமி என்னைத் தாங்குமா?......தங்கள் மீது நான் ஏன் கல்லெறியப் போகிறேன்! இந்நாள் வரை பெருமைபடுத்தினீர்களே அன்றி என்னை ஒன்றும் தாங்கள் சிறுமைப்படுத்தவில்லையே! கடவுள் எங்கோ இருக்கிறார்! சொல்லத்தான் கேட்டிருக்கிறேனே ஒழிய, நேருக்கு நேர் பார்த்தது கிடையாது! ஆனால் தங்களைக் காணும்போதெல்லாம் கடவுளைக் காணபதாக, என் மனம் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்துவிடும்! தங்களை நினைக்கும்போதெல்லாம், கடவுளை நினைப்பதாக என் உள்ளத்தில் ஒருவித அமைதியும் ஆனந்தமும் தவழும்! நம்மைப் பார்த்துத்தான் செந்தாமரை கல்லால் அடித்தாள் என்று தாங்கள் எண்ணியதே ந்தப் பிறவியிலோ நான் செய்த பாவத்தின் விளைவுதான்!"

அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை — துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. விரல்களால் கண்களைக் கசக்கிக்கொண்டே முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்.

"வருந்தாதே செந்தாமரை! விஷயத்தைத் தெளிவாகச் சொல்!'

"கழுதை இருக்கிறதல்லவா அது எவ்வளவு பாரம் போட்டாலும் சுமந்து செல்லும்! எவ்வளவு அடி கொடுத்தாலும் தாங்கிக்கொள்ளும் அதன் சுபாவத்தை நன்றாகத் தெரிந்துகொண்ட மனிதன், அது ஓடஓடத் துரத்தித் துரத்தி அடிப்பான்! பக்கத்தில் வந்தால் அடித்துக் கொன்று போடுவேன் என்று கர்ஜிக்கும் சிங்கமிருக்கிறதே, அது படுத்துத் தூங்கும் திசையில்கூட அவன் திரும்பிப் பார்க்கமாட்டான்! நான் கழுதை—தாங்கள் எவ்வளவு பழி சுமத்தினாலும்–எத்தனை வசைமொழிகளை வாரி வீசினாலும் சகித்துக்கொள்வேன்—பொறுத்துக்கொள்வேன்! கல்லை நான் வீசினேன்—உண்மை! ஆனால் அது தங்களைப் பார்த்து அல்ல — இதோ இருக்கிறதே இந்தக் கொய்யா மரத்தைப் பார்த்து! எனக்கும் சிதாரிக்கும் ஒரு பந்தயம்! மூன்று கல்லில் ஒரு கனியைக் கீழே விழச் செய்கிறேன்–இது நான் சொன்னது! முடியாதென்று சிதாரி மறுத்தாள்! விழச் செய்தால்? — நான் கேட்டேன்! மூன்று கல்லில் ஒரு கனியைக் கீழே விழச் செய்துவிட்டால், என் தலையில் மூன்று குட்டுக் குட்டுங்கள்! விழாமல் போனால்–என்று சிதாரி எதிர்ப்பந்தயம் கேட்டாள்! என் தலையில் மூன்று குட்டுக் குட்டிக்கொள்கிறேன் என்று கூறிவிட்டு, குனிந்து ஒரு கல்லை எடுத்தேன்! அந்தக் கல் மரத்தின்மேல் கூடப்படாமல் வேறொரு பக்கத்தில்

ஓடிவிட்டது! அடுத்த கல், நடுவழியிலேயே விழுந்துவிட்டது! மூன்றாவது கல்...''

"என் முதுகில் விழுந்தது!'

"அதை எண்ணினால், என் உடல் நடுங்குகிறது! என் எண்ணமும் பார்வையும் எல்லாம் கொய்யா மரத்திலேயே இருந்ததால், தங்களை நான் பார்க்கவில்லை!'' என்று அவள் பயத்தோடு சொல்லி நிறுத்தினாள்.

''செந்தாமரை! நான் அவசரப்பட்டுத் தவறான முடிவுக்கு வந்ததற்காக, உண்மையிலேயே வருந்துகிறேன்! பெண்கள் சபல புத்தி கொண்டவர்கள் என்ற கருத்து, என் இரத்தத்தில் நன்றாகக் கலந்துவிட்டதொன்று! மிகவும் விசுவாசமானவர்களின் மீதுகூடச் சிற்சில சமயங்களில் அபாண்டமான சந்தேகங்கள் கொள்வேன்! கடைசியில் நாம் சந்தேகப்பட்டது பொய் என்பது தெரியும்! வேதனையடைவேன்! என்னை நானே நொந்துகொள்வேன்! கொட்டைகள் இருக்கின்றதென்று யாராவது-கிச்சிலிப் பழத்தைக் குப்பையில் போட்டுவிடுவார்களா? விதையில்லாத கனியைப் பார்ப்பது அரிது! அதைப் போல குறைபாடில்லாத மனிதனைக் காண்பதும் துர்லபம்! பழத்தின் அருமையும் பயனும் தெரிந்தவர்கள், கொட்டையைப் பற்றி அக்கறைப்படமாட்டார்கள்! அதுபோல் என்னை நன்றாக அறிந்த உன்னைப் போன்றவர்கள், என் குறைபாடுகளை அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டார்கள்! ......நின்றுகொண்டே இருக்கிறோமே, அதோ அப்படி உட்காரலாமே!'' என்று சிறிது தூரத்திலிருந்த ஒரு கல்லாசனத்தைக் காட்டினான்.

"நான் சொல்லலாம் என்று எண்ணியபோது, தாங்களே கூறிவிட்டீர்கள்!' என்று அவள் புன்னகையோடு சொல்லிக்கொண்டே, அவனைப் பின்தொடர்ந்தாள்.

கல்லாசனத்தின்மீது தூமகேது அமர்ந்ததும், கீழே புற்றரையில் செந்தாமரை உட்கார்ந்தாள்.

"சோலையப்பனுக்கு இன்னும் ஏன் மரண தண்டனை தரவில்லை!''

"மன்னர் ஊரில்லாததினால், தாமதமாகிறது? நானே விசாரணை நடத்தி, அவனைத் தூக்குமரத்தில் தொங்கச் செய்யலாம்! பொன்னையாவிற்குத் தண்டனை கொடுத்ததும் நான்தானே! ஆனால் பொன்னையாவின் நிலையைவிட, சோலையப்பனின் நிலை வேறல்லவா? படைத் தலைவர் ஆளவந்தாரின் மகன் சோலையப்பன்! குலசேகர பாண்டியனின் அரசைக் கட்டிக் காத்தவர் ஆளவந்தார்! பாண்டிய நாட்டின் உயர்விற்காகவே களத்தில் உயிர் விட்டவர்! அத்தகைய ஒரு மாவீரரின் மகனுக்குத் தூக்குத் தண்டனை என்றால், நாட்டில் சிறிது சலசலப்பு இருக்கத்தான் செய்யும். சிற்சில இடங்களில் கலவரங்கள்கூட வெடிக்கலாம்! சோலையப்பனுக்குத் தண்டனை தந்தது தூமகேது, குலசேகரன் ஊரிலிருந்திருந்தால் இந்த அக்கிரமத்திற்கு ஒருநாளும் இசைந்திருக்க மாட்டார் என்று மக்கள் பேசிக் கொண்டாலும் பேசிக்கொள்வார்கள் அல்லவா? எதற்காக அந்தப் பழியை நாம் ஏற்கவேண்டும்? குலசேகரனே தண்டனை தந்துவிட்டால், அதன் நிலைமையே வேறுவிதமாகப் போய்விடும்! அதற்காகவே அவசரமாகப் புறப்பட்டு வரும்படி, மன்னருக்கு ஓலை அனுப்பியிருக்கிறேன்! வரட்டும்!'' என்று தூமகேது சொல்லி, தலையை ஆட்டினான்.

"மன்னர் விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் சந்தேகம்! சோலையப்பனுக்குத் தூக்குத் தண்டனை தர வேண்டுமென்று தாங்கள் கூறினால் ஒருவேளை அவர் மறுத்தாலும் மறுக்கலாம்! ஏனென்றால்...''

"உண்மைதான் செந்தாமரை! நாட்டிற்கு விரோதமான காரியத்தில் சோலையப்பன் ஈடுபட்டான் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டினாலும், அவனுக்குத் தூக்குத் தண்டனை தர மன்னர் தயங்குவார்! அவர் தயங்கினாலும், மயங்கினாலும், என் கட்டளையை நிறைவேற்றித்தானே தீரவேண்டும்!'' என்று உறுதி நிறைந்த குரலில் தூமகேது சொன்னான்.

"சோலையப்பனை உடனே தூக்கிவிட வேண்டுமென்று அரசரே கூறினாலும், அதை எப்படியும் தடுத்து நிறுத்தவேண்டிய கட்டத்தில், இப்பொழுது நாம் இருக்கிறோம்!'' என்று செந்தாமரை திடீரென்று ஒரு புதிர் போட்டாள்.

ஆச்சரியத்தால் விரிந்த கண்களோடு அவளைப் பார்த்து 'தூக்குத் தண்டனையைத் தடுத்து நிறுத்த வேண்டுமா? எதற்காக?'' என்று தூமகேது கேட்டான்.

"ஆமாம், இன்றைய நிலைமையில் சோலையப்பன் இறப்பது நமக்குத்தான் பெரும் நஷ்டமாகும்! அவர் வாழ வேண்டும் — இன்னும் கொஞ்ச காலத்திற்கு! அவரிடமிருந்து புதிய இரகசியமொன்றை நாம் தெரிந்தகொள்ள வேண்டியிருக்கிறது!''

"புதிய இரகசியமா?''

"ஆமாம்! நேற்றிரவு...''பேச்சை அப்படியே நிறுத்திவிட்டு, சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"ஏன் தயங்குகிறாய்? இந்தச் சோலையில் கண்டவர் நுழைய முடியாது! யார் காதிலாவது விழுந்துவிடுமோ என்ற பயம் வேண்டாம்! இருந்தாலும் கொஞ்சம் தாழ்ந்த குரலிலேயே சொல்! நேற்றிரவு என்ன நடந்தது?'

புதுத்தெரு பவழவியாபாரி உலகப்பனைப்பற்றி—...'

'உளவறியச் சொன்னேன்! இலங்கை அரசனுக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பைக் கண்டுபிடித்து விட்டாயா?'

அவனிடத்தில் உளவறிவதா? ஒன்றுமே முடியவில்லை! அவனை நானைந்து முறை சந்தித்துப் பேசினேன்! என்னைக் கண்டாலே அவன நடுங்குகிறான்! 'அம்மா அம்மா!, என்று மரியாதையாகக் கூப்பிடுகிறான்! கூழைக்கும்பிடு போடுகிறான்! அமமா அம்மா என்று அழைக்காதீர்கள். அதைக் கேட்க எனககு நாணமாக மட்டுமல்ல வெறுப்பாகவும் இருக்கிறது, செந்தாமரை என்று பெயரிட்டே அழையுங்கள் — அப்பொழுதுதான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும்— என்று ஓர விழிப்பார்வையோடு பேசினேன்! உடனே அவன் 'பாவம்! பாவம்!' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான். நேற்றிரவு தாங்கள் என் கனவில் வந்தீர்கள் என்றேன்—காதல் கொண்டவளைப் போல!' ஹி! ஹி! அப்ப

### விலைவாசி குறையுமா?

..விலைவாசி வீழ்ச்சியுறுதபடி இருக்க மானிய உதவி தருவது என்பதுதான் இப்போதைய கொள்கை. விளைபொருள்களின் விலைவாசி கணிசமாக உயரப் போகிறது. இதனால் வருமானமும் கூடுதலாகும். ஏதாவது ஒருவகையில் விவசாயிகளிடமிருந்து இதில் ஒரு பகுதியை வரி உயர்வின் மூலம் பெறுவிடில் தேசத்தின் சேமிப்பு குறைந்துவிடும்.

--திட்டக் குழு அறிக்கை

டியா?' என்று வெருளியைப் போல பல்லைக் காட்டினன்! இப்படி எந்நேரமும் கடையிலேயே அடைபட்டிருக்கிறீர்களே—மாலை நேரத்தில் வைகை பக்கம்போய், சிறிது நேரம் தனியாக இன்பமாகப் பேசியிருந்துவிட்டுவரலாமே என்று அழைத்தேன்! இவ்வளவு விளக்கமாகச் சொல்லியும், அந்தத் தடியனால் புரிந்துகொள்ள முடியவில்லை. நானென்று சொன்னால், அவனொன்று கூறுவான். உண்மையிலேயே அவன் அப்பாவியாக இருக்கவேண்டும் — அல்லது கைதேர்ந்த ஏமாற்றுக்காரனாக இருக்கவேண்டும்!'

'சரியாகச் சொன்னாய் செந்தாமரை — அதே அபிப்பிராயம்தான் எனக்கும், அவனைப்பற்றி.'

"நேற்றிரவு அவனைச் சந்திக்கலாம் என்று நானும் சிதாரியும் சென்றோம்! செல்லும் வழியில், யாரோ இருவர் ஒரு மரத்தடியில் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு வேறொரு மரத்தின் அருகில் மறைந்து நின்று உற்றுக் கேட்டேன். 'நீ ஒன்றுடா, அந்தக் குகையில் வெறும் ஓலைகள் மட்டுந்தான் இருந்தன—எங்கோ பூமிக்கடியில் தான் திரட்டிய பொன்னையெல்லாம் பொன்னையா புதைத்து வைத்திருக்கிறாராம்! அந்த இடம் சோலையப்பன் ஒருவருக்குத்தான் தெரியும்! அதை மட்டும் அவரிடமிருந்து எப்படியாவது தெரிந்துகொண்டால் போதும், அந்தப் பொன்னைக்கொண்டு ஒரு பெரும் படையே திரட்டிவிடலாம்! அதன் பிறகு ஒரே நாளில் சோலையப்பனை விடுவித்துவிடலாம்!' என்று ஒருவன் கூறினன். 'புறப்படு, நேரமாகிறது!' என்று மற்றொருவன் எழுந்தான். இருவரும் வேகமாக நடந்தார்கள், மரங்களின் இருளிலேயே மறைந்து மறைந்து நாங்கள் பின்தொடர்ந்தோம். சிறிது தூரம் சென்றதும், அங்கே நின்றிருந்த இரண்டு குதிரைகளின் மீதேறி மறைந்து போனார்கள்! இருளில் அவர்கள் யார் என்பதைத் தெரிந்துகொள்ளவே முடியவில்லை!"

"ஆச்சரியமாக இருக்கிறதே, செந்தாமரை!"

"அதைச் சொல்லத்தான் தங்களைத் தேடிவந்தேன்! இல்லத்தில் தாங்கள் இல்லாததினால், இப்படிச் சாலைக்கு வந்தோம்."

"பொன்னையாவின் புதையல்! அந்தப் புதிய இரகசியத்தை சோலையப்பனிடமிருந்து அறிந்தாகவேண்டுமே! எப்படி முடியும் ஒருமுறை ஏமாந்துவிட்ட அவன், மறுமுறையும் ஏமாறமாட்டானே! இப்பொழுது அவனைப் பார்த்துவிட்டுத்தான் வருகிறேன்! என்னைக் கண்டால் அவனுக்கு உண்டாகிற ஆத்திரமிருக்கிறதே.....அப்பப்பா...... இடையில் சிறைக்கம்பிகள் இல்லாவிட்டால், என் கழுத்தை ஒரே அழுத்தாக அழுத்திச் சாகடித்துவிடுவான்!" என்று தூமகேது கூறிக்கொண்டே கல்லாசனத்தை விட்டு எழுந்தான்.

"அவன் இனி உன்னைக்கூட அல்லவா நெருங்கவிடமாட்டான்!" என்று எழுத்தாணியைத் தடவிக்கொண்டே, யோசனையோடு கூறினன்.

"ஆமாம், என்னைக் கண்டால் சீறிவிழுவார்! சினத்தோடு வார்த்தைகளைக்கொட்டுவார்! ஆனாலும் அவரைத் திருப்பவும் மயக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது! ஒரு முறைக்கு பல முறை அவரைச் சந்தித்து கண்ணீர் வழியப் பேசினால் அவர் மனம் மாறிவிடும்! அவர் உள்ளத்தை ஓரளவிற்குப் புரிந்துகொண்டவள் நான்! ஆனால் அவர் மனதை மாற்ற கொஞ்ச நாட்கள் பிடிக்கலாம்!"

"கொஞ்ச நாட்கள் என்ன, மாதங்கள் பல ஆனாலும் கவலையில்லை! ஆனால்—"

"அந்தப் புதையல் இரகசியத்தை எப்படியும் என்னால் அறிந்துகொள்ளமுடியும்! இந்தச் செந்தாமரையினால், அந்தச் சோலையப்பனை எத்தனை முறை வேண்டுமானாலும் ஏமாற்றமுடியும்! ஏமாற்றியும் காட்டுகிறேன்!" என்று முகத்தை உயர்த்திக் கூறினாள்.

"உன் திறமை எனக்குத் தெரியாததல்லவே, செந்தாமரை!"

"அப்படியானால் உலகப்பனை விட்டுவிட்டு, சோலையப்பன்மீது என் நினைப்பையும் நேரத்தையும் செலவழிக்கலாம் அல்லவா?"

"உலகப்பனை விட்டுத்தள்ளு, பிறகு பார்த்துக்கொள்ளலாம்! முதலில் பொன்னையாவின் புதையலைக் கண்டுபிடிக்கவேண்டும்!"

"சோலையப்பனின் மனதைக் குழப்ப-இரவில்கூட நான் சிறைச்சாலைக்குச் செல்லவேண்டியிருக்குமே!"

"நீ எந்த நேரத்திலும் சிறைக்குள் செல்லலாம்!"

"அந்த அனுமதி ஒன்றுபோதும் எனக்கு! இன்றே, இப்பொழுதே வேலையை நான் ஆரம்பித்துவிடுகிறேன்!" என்று செந்தாமரை சொல்லி நிறுத்தியதும், கையில் ஒரு முயலைப் பிடித்துக்கொண்டு சிதாரி அவர்களை நோக்கிவந்தாள்.

"இந்நேரம் எங்கே போய் இருந்தாய் சிதாரி?" என்று அருகில்வந்து நின்ற தோழியைப் பார்த்துச் செந்தாமரை கேட்டாள்.

"நீங்கள் கொய்யாப்பழம் அடித்தபோது, பக்கத்தில இந்த வெள்ளை முயல் ஓடியது! அதைத் துரத்திப் பிடித்துவர, இவ்வளவு நேரம் பிடித்தது!" என்று வியர்வையைத் துடைத்துக்கொண்டே, சிதாரி கூறினாள்.

"பாவம், அதன் காதைப் பிடித்துக்கொண்டிருக்கிறாயே வலியெடுக்கப் போகிறது!"

"என் காலில் இருக்கும் வலியை அது உணரவேண்டும் என்பதற்காகத்தான் — இதன் காதை நான் பிடித்துக்கொண்டு இருக்கிறேன்" என்று சிதாரி சொன்னதும், அவர்கள் சிரித்தனர்.

"செந்தாமரை! நான் வருகிறேன் நாளை காலையில் வெளியூருக்கு முக்கியமான ஒரு விஷயமாகச் செல்கிறேன்! திரும்பிவர நான்கைந்து நாட்கள் பிடிக்கும்! திரும்பி வந்ததும், உன் இல்லத்திற்கு வருகிறேன்!" என்றுக் கூறிவிட்டு, தூமகேது அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான்.

அவன் உருவம் மறைந்ததும், செந்தாமரையும் சிதாரியும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

(வளரும்)

**அமைச்சரின் எச்சரிக்கை!**

"..அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாடு பிரமாதமான முன்னேற்றம் அடைந்துவிடும் என்று கனவு காண வேண்டாம்; இத்தகைய முன்னேற்றத்துக்கான சூழ்நிலை எதுவும் இல்லை."

—அமைச்சர் ஆர். வெங்கட்ராமன்
(சென்னை பண்டங்கள் தயாரிப்பாளர் சங்கத்தில்)

# போற்றிப் பாமாலை அன்றும் இருந்ததுதான்!

9-ம் பக்கத் தொடர்ச்சி

லாம்; என்றாலும் 'தவிப்பு' அத்தனைக் கொடுமையான நிலைமைக்கும் துரத்திவிடும் என்பதை விளக்கத் தரப்பட்டதாகக் கொள்வதிலே தவறு இல்லை.

ஆகவே பெறுபவன் இழக்கிறான் என்பது, பொருளையும் நேரத்தையும் மட்டுமல்ல, மன அமைதியையும் இழந்துவிடுகிறான் என்ற பொருளும் தருகிறது.

ஆனால் ஏன் இந்த 'முகஸ்துதி' கேட்பதிலே இன்பம் பிறக்கிறது? இன்று நேற்று ஏற்பட்டதல்ல! தரத்தில் குறைந்தவர்களுக்கு மட்டும் ஏற்படும் இயல்பும் அல்ல. மாந்தருக்கு மட்டுமல்ல, மகேசனுக்கே அந்த இயல்பு இருக்கும் என்று எண்ணிடச் செய்கிறார்கள் 'பக்திப் பாமாலை' புனைந்தளித்தோர்! ஆயிரம் நாமத்தால் அர்ச்சிப்பது, இதிலே சாதாரணமானதாகிவிட்டது; கட்டணம்கூட அதிகமில்லை. ஆனால் மகேசனின் 'திருக்கோலத்தையும், திருக்கலியாண குணத்தையும், திருவிளையாடலையும்' புகழ்ந்து தொடுக்கப்பட்டுள்ள பாமாலைகளைப் பார்த்திடும்போது, போட்டி போட்டுக் கொண்டு புகழ் பாடி 'புனிதனின்' புன்னகையைப் பெற்றிட முனைந்திருக்கிறார்கள் என்பது புரிகிறது

ஆண்டவனுக்கு விருப்பு வெறுப்பற்றவன், நீதி நியாயத்தை வகுத்தவன் என்றெல்லாம் 'இலக்கணம்' இருப்பதனால், இத்தனைப் புகழ் கேட்டும், அவர் மயங்கிடாதிருப்பார் என்று முடிவு செய்துகொள்ளலாமே தவிர, அந்தப் பாமாலைகளை மட்டுமே, 'எல்லாம் அளிக்க வல்லவராக்க' 'தையாவது பெற விழைபவர்' அளித்திடும் புகழாரம் என்ற அளவிலே பார்ப்போமானால், அந்தக் கலையை எத்தனை நேர்த்தியாக வளர்த்துவிட்டிருக்கிறார்கள் என்பது நன்றாக விளங்கும்.

பெறுபவர் இழக்கிறார் என்ற கருத்து 'பெம்மானை'ப் பொருத்தவரையில் பொருந்தாது. ஏன் என்றால் 'உள்ளது அனைத்தும் அவன் தந்தது' எனப்படுவதால். ஆனால் இன்று உலகு உள்ள நிலையைப் பார்க்கும்போது, பாமாலை பெற்ற அவரும் நிரம்ப இழந்துவிட்டிருக்கிறார் என்றே கூறத் தோன்றுகிறது. எத்தனை எத்தனை நலிவுகள்! நாசங்கள்! பேதங்கள்! பீடைகள்! வஞ்சகம்! அவன் படைப்புகளில் சில, பலவற்றை அழித்திடும் கொடுமை! இவை யாவும் அவர் வகுத்த முறையுமாகாது, அவர் விரும்பும் முறையாகவும் இருக்கமுடியாது. எனினும் உலகம் எந்த நிலைமைக்கு உருக்குலைக்கப்பட்டிருக்கிறது. இதனைக் கண்டும் 'அவர்' ஏன் குவலயத்தை இன்னமும் விட்டுவைத்திருக்கிறார் என்று எண்ணும்போது. ஒருவேளை அவரும் புகழ் பாடக் கேட்டுக் கேட்டுப் பழகிப் போனதால், 'பெற்றவர் இழப்பர்' என்ற கருத்துக் கேற்ப ஆகிவிட்டாரோ என்று எண்ணிடத் தோன்றுகிறது.

மகேசன் 'எல்லாம் வல்லவர்' என்பதால் அவருக்கு இதுபற்றிய வரவு-செலவு பற்றிய நினைப்பு எழத் தேவையில்லை. ஆனால் மாந்தர், ஒவ்வொரு கட்டத்திலும் இந்த வரவு-செலவுக் கணக்கைப் பார்த்தாக வேண்டும்.

தமிழ் மரபு புகழ் பெறுவது, முகஸ்துதி அல்ல என்பதனை நினைவிற் கொண்டிட வேண்டும்.

புகழ் பெற்றிடவேண்டும் என்ற நினைப்புக் கொள்வது மட்டுமல்ல, ஒரு நாள் இல்லாவிட்டால் மற்றோர் நாள் புகழ் தன்னைத் தேடிவந்திடும் என்பதிலே தளராத நம்பிக்கையுடன் பணியாற்றிட வேண்டும்.

செயல், முதல்! உழைப்பு, முறை! புகழ், விளைவு;

சில மலர் விரைவினில் பூத்திடும், உதிர்ந்திடும். சில மலர் பூத்திடுவதும் உதிர்ந்திடுவதும் விரைவிலே இருந்திடாது.

எனவே புகழ் தேடிச் செல்லத் தேவையில்லை. செயலின் நேர்த்தி புகழைப் பிடித்திழுத்துக் கொண்டு வந்து நம் முன் நிறுத்தும் என்ற உணர்வுடன் தமிழர் பணியாற்றினர்; புகழ் ஈட்டினர்.

இந்தப் புகழ் நமக்கு நமது நாட்களிலே கிடைத்திடாது போகக்கூடும்: எனினும் பிறகோர் நாள் பலர் புகழ்ந்துரைக்கத் தக்க நிலை பிறந்தே தீரும் என்று உறுதி கொண்டு பணி புரிந்தவர்களே நிலையான புகழைப் பெற்றனர்; இறவாப் புகழ் பெற்றனர்.

மன்னன் ஆணை''யும் உதவியையும் பெற்று கடற் பயணம் நடத்தி, எவரும் காணாதிருந்த அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் பிறகோர் நாள் அந்த அரச அவையிலே இழிமொழியைக் கேட்டு இன்னலால் தாக்குண்டபோது, மெல்லிய குரலில் கூறினானாம்.

> "இந்த மன்னனையும் இவன் அரசையும் மறந்துபோன பிறகும் நெடுங்காலம் வரையில் மக்கள் என்னையும் என் வெற்றியையும் மறவாது பாராட்டுவர்" என்றானாம்

கட்சிக்கோ, அதன் மூலம் நாட்டுக்கோ தலைவரானவர்கள், இது போன்ற இறவாப் புகழ் தேடிட முற்பட வேண்டும் — இரைச்சலிடுவோரின் புகழுரையை அல்ல! இச்சகம் பேசுவோரின் புகழ்ச்சியை அல்ல!

அந்த நோக்கம் கொண்டிடின் தம்மைச் சுற்றிலும் உள்ளவர்கள், பிறரைத் தூற்றிடுவோராக இருந்திடின் அவர் தம் தொடர்பு அறுத்துக் கொண்டிடும் உறுதி காட்டிடவேண்டும்; துதி பாடகராக இருந்திடின், போதும் இந்த 'முகஸ்துதி' —நான் இதுகேட்டு மயங்கிட மாட்டேன் என்று திட்ட வட்டமாகத் தெரிவித்துவிடவேண்டும்.

அது போன்றே, தம்பி! ஜனநாயக முறை செம்மை அடையவேண்டுமென்றால், துதி பாடும் முறை அறவே போயாகவேண்டும்.

அன்பு காட்டுதல் வேறு துதிபாடுதல் முற்றிலும் வேறு!

பின் பற்றுதல் வேறு, தொத்திக் கொள்ளுதல் என்பது வேறு. பாராட்டுதல் என்பது வேறு பல்லிளித்தல் என்பது முற்றிலும் வேறு; நோக்கம், விளைவு, தரம் எனும் எந்த முனையிலிருந்து பார்த்திடினும்.

ஒருவர் உயர் இடம் சென்றிடினும், அவர் கூறுவனவற்றினில் உள்ள உயர்வான கருத்துக்களைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும், போற்றிட வேண்டும்; பின்பற்றிடவேண்டும்: எல்லாவற்றையும் அல்ல.

# எட்டுடன் எட்டு பதினெட்டென்றல்...

சேற்றிலே இருந்திடினும் செந்தாமரை,
செந்தாமரைதான்!

ஆனால் செந்தாமரை இருந்ததாலேயே,
அந்தச் சேறுமா சந்தனமாகிவிடும்?

பேதையும் அதுபோலக் கூறிடானே!

தலைவராகி, நாட்டை நடத்திச் செல்பவராகிவிட்டார் காமராஜர் என்கிறார்கள். மெத்த மகிழ்ச்சி. ஆனால், அதனால், அவரிடம் இருந்து நாம் எதைப் பெற நினைத்திடவேண்டும்? மக்களுக்குத் தேவையான நல்லாட்சியை! அவருக்கு நாம் என்ன தரவேண்டும்? முகஸ்துதியையா? அவர் எட்டுடன் எட்டு பதினெட்டு என்று கூறிடின், ஆகா! இஃதன்றோ புதுமுறைக் கணக்கு! இதுநாள்வரை எவரும் கூறிடாத கணக்கு!!—என்று வியந்து பாராட்டிடுவதுடன், மற்றவர்களும் மதிமயக்கம் கொண்டிடவேண்டும் என்று கூறி நிற்பதா?

துதிபாடகர்கள், புகழ்பாடிப்பாடி மகிழ்கிறார்கள்; அவரை மகிழ்விக்கிறார்கள், பிறகோர் நாள்; ஏமாற்றம் தாக்கிடும்போது என்ன கூறுவர்? என்னென்ன புகழ்மாரி பொழிந்தேன்! எப்படி எப்படித் தூக்கி வைத்தேன்! என்னாலன்றோ எட்டாததெல்லாம் அவர் கரம் எட்டிற்று! பட்டுப்போக இருந்தமரம் துளிர் விட்டது! படர்ந்துபோக இருந்த விளக்கு ஒளி பெற்றது! என்னென்ன புகழுரைகள்—பொழிந்தேன்! அர்ச்சனை விதவிதமாக! ஆராதனை பலப்பல! இதற்கு முன்பு வேறு ஒருவரும் செய்திடாத முறையில்! கண்டோர் வியந்திடும் வகையில்!! ஆனால்....—என்றல்லவா பேசிடுவர்.

பாடல் தெரியுமல்லவா தம்பி!

"கல்லாத ஒருவனை நான் கற்றாய்
என்றேன்."

துதிபாடகர்கள், தமது குரலொலியை அதிகமாக்கிக் கொள்வதன் மூலமாகவே, தமது இயல்பு யாது என்பதையும், நோக்கம் என்ன என்பதையும் மக்கள் தெரிந்துகொள்ளச் செய்துவிடுவதன்மூலம், நாளாவட்டத்தில் தமது தரம் தன்னாலே தாழ்ந்துபோவது காண்பர். அரசு பெரிது எனினும் கட்டியங்கூறுவோனின் நிலை, மட்டமானதுதானே!

எந்தக் கொலுமண்டபத்திலும் கைகட்டி வாய்பொத்தி நின்றுமட்டுமே பிழைக்கும் வழியைப் பெறமுடியும் என்ற நிலையில் இல்லாத அறிவாளர்கள்—பல்வேறு துறைகளிலே வித்தகர்களாக உள்ளவர்கள்—துதிபெற்று நிலை உயர்ந்து ஒருவர் நெறித்த புருவத்தினராகிறார் என்ற உடன், நமக்கென்ன என்று இருந்துவிடாமல், நாலுபேர் செல்கிற வழியில் நாமும் செல்வோம் என்று தாழ்ந்துவிடாமல், உண்மையை எடுத்துரைத்திட முன்வந்திடவேண்டும். பெரிய நிலையில் உள்ளவர்கள், தவறான கருத்து கொண்டிடின், தவறான போக்கினை மேற்கொண்டிடின், அறிவு கொளுத்திட, இடித்துரைத்திட, தடுத்து நிறுத்திடத் தயங்கிடலாகாது. தயக்கம் காட்டிடின், மக்களாட்சி முறையின் மாண்பே மாய்ந்து போகும்.

நிலை உயர்ந்திடின் என்ன? நீதி எதனையும் விட உயர்ந்தது! உண்மையே அனைத்திலும் உயர்ந்தது! அந்த உறுதியுடன் ஒரு சிலர் நடந்துகொண்டிடினும் போதும், மெள்ள மெள்ள ஆனால் உறுதியாக, மக்களாட்சியின் மாண்பு வளர்ந்திடும்.

அமெரிக்கக் குடி அரசுத் தலைவர் ஜான்சன், அறிவாளர்களை, கலைஞர்களை, விஞ்ஞானிகளை, போற்றுபவர்; ஆதரவு காட்டுபவர்; எனினும் வியட்நாம் பிரச்சினையில் மேற்கொண்டிடும் போக்கு தவறானது, ஆபத்தைத் தரத்தக்கது, அநீதி நிரம்பியது என்பதனை எடுத்துரைக்க, கண்டித்திட பேரறிவாளர் துளியும் தயங்கினார்களில்லை.

அஃது அவர்களின் நெஞ்சுரத்தையும் நேர்மைத் திறத்தையும் காட்டுகின்றது.

அஃது முதலில் ஜான்சனுக்குக் கோபத்தைக் கூடக் கிளறிவிட்டிருக்கக்கூடும்! முதலில். பிறகு அவரேகூட அவர்களின் நேர்மையை வியந்து பாராட்டிடத்தான் செய்வார்.

அரசாளும் முறை, சட்டமியற்றும் முறை; பொருளாதார முறைகள் என்ற பலவற்றிலே, குறை உள! அறிந்தோர், அதனை மற்றையோர்க்கு அறிவித்திட அஞ்சலாமோ? அரசாளும் நிலைபெற்றோர்க்கு எச்சரிக்கை தந்திடாது இருந்திடப்போமா?


ஏஜண்டுகள் தேவை

**மலையாள வைத்தியசாலை**

"கிஸ்கோ" (ஜில்லா ஏஜண்ட்)
மலையாள பார்மஸியில் தயாராகும் பவர்கூடிய ஆசவ அரிஷ்டங்கள் விற்பனைசெய்ய எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

எங்களது ஏஜண்டுகள்:

K. M. சாகுல்ஹமீது, 95, அபிபுல்லாரோடு, சென்னை-17
S. கந்தசாமி, என். கோவில்பட்டி, நத்தம்.
D. ரெங்கநாதன், நல்லமநாய்க்கன்பட்டி, தாராபுரம்.
K. சாகுல்ஹமீது, டர்னபுரம், கொடைக்கானல்.
இராஜகோபால், கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு அருகில்
சண்முக முதலியார், ஒட்டன்சத்திரம். [மணப்பாறை.

உடனே விண்ணப்பிக்க:

State Sole Agent: சுலைமான்
மலையாள வைத்தியசாலை,
நெ. 145, R. S. ரோடு, :: திண்டுக்கல்-3

# பேச்சிலும் செயலிலும் திறம் மிகத் தேவை!

துதிபாடகரின் புகழ் கேட்டுக் கேட்டு மயக்கம் மேலிட்ட நிலையில் உள்ளவர்கள், எவரேனும் தமது முறையில் குறைகண்டு கூறிடின் கொதித்தெழுவர். ஆம்! ஆனால்? கூறாது இருந்திடின்? மக்களுக்கு அல்லவா பெருந்தீங்கு செய்தவராவர்.

இந்தத் தயக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு, ஆட்சி முறையிலே காணப்படும் கேடுகளைக் கண்டித்திட, நல்லறிவு தந்திட, பலர் இன்று முன் வருகின்றனர். மகிழ்ச்சி!

ஐந்தாண்டுத் திட்டம்-நாணய மதிப்புக்குறைப்பு — போன்றவைகளிலே தெளியும் குறைபாடுகளை, அமெரிக்காவின் பிடி வலுவாக்கிக்கொண்டு வருவது, உணவுப் பிரச்சினையிலே நெருக்கடி நீடிப்பதுபோன்ற பிரச்சினையிலே, பல்கலைக் கழகப் பேராசிரியர் பலர் தெளிவான கருத்தையும், துணிவான கண்டனங்களையும் வெளியிட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியினராக இருந்தும் முன்னாள் அமைச்சர், க. சந்தானம் அவர்கள் இந்தத் துறையிலே பாராட்டத்தக்க பணியாற்றி வருகின்றார்கள்.

துதிபாடகர்கள் கிளப்பிடும் ஒலியில், இவர்களின் குரல் வெளியே தெரியவிடாமல் செய்யப்பட்டு விடுகின்றது; என்றாலும் இவை மூலம் மக்கள் தெளிவு பெற்றுக்கொண்டு வருகின்றனர்.

நிலை கண்டு நடுங்கி உண்மையைக் கூறிடத் தயங்குவது, பெரும்பாலோருக்கு இயல்பு. சிலரேனும் அந்த இயல்பினை நீக்கிக்கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது.

இன்னும் சிலர், உண்மையைக் கூறியாக வேண்டும் என்ற துடிப்பும் கொள்கின்றனர், கூறிடின் கேடடைவோமோ என்ற அச்சமும் கொள்கின்றனர்; அதன் காரணமாக, உள்ள குறைகளை, 'இலை மறை காய்' என்ற முறையிலே எடுத்துக் காட்டியுள்ளனர்.

தம்பி! பிரிட்டனை ஆண்டுவந்த இரண்டாவது சார்லஸ் என்ற மன்னன், தன்னைப் பெரிய கவிஞன் என்று எண்ணிக்கொண்டான்! ஏதேதோ கிறுக்கித் தள்ளியபடி இருந்தான்—கவிதைகள் என்ற நினைப்பில். கருத்தில்லை, கற்பனைத் திறம் இல்லை, இலக்கணம் இல்லை, எழில் இல்லை—ஆயினும் குப்பை, வார்த்தைக் கோவை என்று கூறடலாமா? மன்னன் எழுதியது!!

மன்னன் அத்துடன் இல்லை. அரச அவையின் மதிப்புமிக்க கவிஞனை அழைத்து எமது கவிதையினைப் பற்றிய உமது கருத்தைக் கூறுவீர் என்றான். என்றானா? கட்டளை பிறப்பித்தான்!

கவிஞன் பார்க்கின்றான், கடுங்கோபம் கொள்கின்றான், வெறும் குப்பையைக் கவி என்று கூறியது பற்றி. என் செய்வான்? கவி உள்ளம் சொல்கிறது, இஃது கவிதை அல்ல என்று சொல்லிவிடு என்று. மன்னன் எழுதியதாயிற்றே என்ற நினைவு குதித்தெழுந்து கூறுகிறது, நாடாளும் மன்னன் எழுதியது! ஏடு தூக்கிடுவோனே! இஃது நற்கவிதையே என்று கூறிடு! இல்லையேல், மன்னன் சீற்றம் உன்னைத் தாக்கிடும் என்று. கூறுவாயோ அங்ஙனம்! கூறிடின் குவலயம் உன்னை என்னசொல்லும். நற்கவிதை எது என்று அறியாத நீயோ கவிஞன்? உனக்கோ நீள் புகழ்? என்று கேலி பேசும். இப்போது மட்டுமா இழுக்கு! வழி வழி வருவோர் உன் கல்லறைமீது காரித் துப்புவர்; என்று அவனுடைய கவிதை உள்ளம் கூறுகிறது. என் செய்வான்! திகைத்தான், திணறினான், திடுக்கிட்டுப் போனான்! நெடு நேரத்திற்குப் பிறகு ஒரு யோசனை பிறந்தது.

"அரசே!" என்றான்; அரசே! தாங்கள் சகலவல்லமையும் பொருந்தியவர்! தங்களால் ஆகாததும் ஒன்று உண்டா! எதனையும் செய்து முடித்திடும் ஆற்றல் படைத்தவர் தாங்கள்! என்ன காரணத்தாலோ, மிகமிக மட்டமான முறையிலே கவிதை எழுதிக்காட்ட வேண்டும் என்று எண்ணிக்கொண்டீர்கள். தங்களின் பேராற்றலையும், கவிதா சக்தியையும் வேண்டுமென்றே எங்கோ ஒளிந்திருக்கச் செய்துவிட்டு குப்பை என்று சொல்லத் தக்க இந்தக் கவிதையை இயற்றினீர்கள்! நல்ல கவிதையை மட்டும் அல்ல இப்படிப் பட்டதையும் எழுத முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதில், மன்னா! தாங்கள் மகத்தான வெற்றி பெற்று விட்டீர்கள். வாழ்க தங்கள் ஆற்றல் வாழ்க தங்கள் கொற்றம்! வாழ்க நற்கவிதை!—என்று கூறித் தப்பித்துக்கொண்டாராம் அந்தக் கவிஞன்.

இன்றைய ஆட்சியின் விளைவுகள் பற்றி எழுதிடும் பலர், இதுபோல, உண்மையை அப்பட்டமாகக் கூறிடின் ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சி, பஞ்சத்தைப் பற்றாக்குறை என்றும், வேதனையைச் சோதனை என்றும், கடன் சுமையை உதவித்தொகை என்றும், பட்டாடை உடுத்திக்காட்டுகின்றனர்.

துதிபாடகர்களின் துந்துபி ஒருபுறம், அறிந்தோர் அச்சம் காரணமாகக் காட்டிடும் தயக்கம் மற்றோர்புறம், எடுத்துரைப்போரும் இலைமறை காய் என்ற முறையில் உண்மையைக் காட்டிடும் தன்மை பிறிதோர் புறம், என்றுள்ள இந்தச் சூழ்நிலையை நமது சுறுசுறுப்பான பிரசாரம் மட்டுமே மாற்றிட முடியும்; மக்கள் தெளிவு பெற்றிடச் செய்யமுடியும்.

அதற்குத் தம்பி! நமது பேச்சிலும் எழுத்திலும் சூடு அல்ல ஒளிதான் அதிகம் இருக்கவேண்டும்.

அந்த ஒளியினைத் தந்திடும் வல்லமை உனக்கு உண்டு என்பதால்தானே தம்பி! நான் அன்புடன் அழைத்தவண்ணம் இருக்கிறேன், ஒளிபடைத்த கண்ணினாய்! வா! வா! வா! என்று.

அண்ணன்,

அண்ணாதுரை


செங்கை மாவட்ட 4-வது மாநாடு
செங்கற்பட்டில்
அக்டோபர் 15, 16ல் நடைபெறும்.

| தலைவர்: | திறப்பாளர்; |
| --- | --- |
| வி. கிருஷ்ணமூர்த்தி | புலவர் கோவிந்தன் |
| எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ. | எம்.ஏ., எம்.எல்.ஏ, |

அனைவரும் வாரீர், அணி அணியாக!

4-ம் பக்கத் தொடர்ச்சி

கடைசியாக உள்ள ஒரேவழியான ஐ. நா.வைத்தான் இங்கிலாந்து நம்பியிருக்கிறது.

ஐ. நா.வின் படிக்கட்டுகளைத் தாண்டிச் சென்று அங்கே அடுக்குகளாகக் குவிந்துகிடக்கும் எண்ணிக்கையில்—காஷ்மீர்போல-இனி ரொடிஷியாவும் சேரும்!

ஐ. நாவுக்குச் சென்ற எந்த பிரச்சினையும் விரைவில் — எதிர்பார்க்கும் வகையில், தீர்வுடைவதற்கு அங்கே தகுந்த ஒத்துழைப்புச் சூழ்நிலை இல்லை என்ற உண்மையை வேண்டுமானால் உலகின் பெரும் சக்திகளுள் ஒன்ருக இருக்கும் பிரிட்டனுக்கு இது தரலாமே ஒழிய பிரச்சினை உடனடியாகத் தீர்த்துவைக்கப்படும் என்பதற்கு நம்பிக்கை இல்லை.

கிராமப் புறங்களிலே நாட்டு வக்கில்கள் என்று பெயர் பெற்ரோர் ஒரு யோசனையைச் சொல்வார்கள்; "நீயாக ஏன் முன்னே செல்கிருய்; கோர்ட்டுக்கு அவன்வேண்டுமானல் முன்னே போகட்டுமே நமது வேலையும் எளிதாகும்; 'செலவும் மிச்சம்' என்பதாக!

அதைப்போல இப்போது ரொடிஷியப் பிரச்சினை ஐ. நாவுக்குப் போக இருப்பது ஸ்மித்துக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு கூடுதல் சாதகம் தான்.

"வெளியிலேயே எனக்குஎதிராக ஒரு அணி திரட்ட முடியவில்லை; ஐ. நா.வுக்குப் போகிருர்களாம்! ஏதோ இந்த நல்ல காரியததுக்காகவாவது ஐ. நாவில் ஒரு ஒற்றுமையான முடிவு கிடைக்கட்டும் பார்ப்போம்!" என்றுதான் ஸ்மித் உள்ளுக்குள் சிரிப்பார்!

ஸ்மித்துக்கு ஆதரவாக இப்போதுள்ள இரண்டு நாடுகளின் எண்ணிகலை பிரச்சினை ஐ. நா. போன பின்னர் வளராமல் இருந்தால், அதுவே போதும்!

— எஸ். ஆர்.

முகப்பில்....

தூத்துக்குடி மாநாட்டுத் தலைவர்:

**மேயர் மோசஸ்**

திறப்பாளர்:

**செ. மாதவன்**

2-ம் பக்கத் தொடர்ச்சி

ரியை விட்டுவிட்டு எழுதினுல் என்ன ஆகும் என்பதை.

11. புவனேஸ்வர் மாநாட்டில் காமராஜர், நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் செலவு குறைக்கப்படவேண்டும் என்று பேசினுரே, அவர் பேச்சைக் கேட்டதாகத் தெரியவில்லையே ஏன்?

திட்டம்போடுபவர்களைக் கேட்கவேண்டும் அல்லது யோசனை அருளிய காமராஜரைக் கேட்கவேண்டும். என்னைக் கேட்கிறீரே! சரி. திட்டம் தீட்டுபவர்கள் என்ன சொல்லுவார்கள் என்று தோன்றுகிறது என்பதை மட்டும் சொல்லுகிறேன், திட்டம் தீட்டுவது பொருளாதார நிபுணர் வேலை! இவர் எதையாவது சொல்லி வைப்பார்! அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா? என்று கேட்பார்கள்,

12. தேர்தல் சம்பந்தமான வேலையைக் கவனிக்க டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சுற்றிக் கொண்டிருந்தார். இப்போதுபக்தவத்சலஞர் பவனி வருவார் என்கிருர்களே ஏன் இந்த மாறுதல்?

நான் முதன்மந்திரி என்பதை மறந்துவிட்டாரா, காமராஜர்! தேர்தல் வேலை செய்ய என்னுல் முடியாதா! நான் இருக்க டி. டி. கே. எதற்கு என்று பக்தவத்சலஞர் பெத்தக் கோபத்துடன் கிளம்பிவிட்டார என்கிருர் பூந்தமல்லியார் ஒருவர்!

13. ரூபாயின் மதிப்பை மீண்டும் குறைக்கப் போகிருர்களா என்ன?

குறைக்கப்படலாம் என்ற கருத்தை சில வடநாட்டு இதழ்கள் வெளியிட்டிருந்தன. இதனை இந்திய அரசு மறுத்திருக்கிறது. என்றுலும், கடந்த முறை குறைககப்பட்டபோதே 75 சதவீதம் குறைக்க வேண்டுமென உலக பாங்க் கோரி இருந்ததாம். அந்த அளவுக்கு இந்தியா குறைக்காததனுல், அரசினர் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லையெனவும், பொருளாதார மலர்ச்சி ஏற்படவில்லையென்றும் அனைத்து நாட்டு செலாவணி நிதி அதிகாரிகள் இப்போது கருதுவதாகத் தெரிகிறது. இதனுல் மேலும் மதிப்புக் குறைப்புச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் இந்திய அரசுக்கு ஏற்படலாமெனவும் அதிகார வட்டாரங்கள் பலமாகக் கருதுகின்றனவாம்.

என்ருலும் முன்னர், மதிப்பைக் குறைத்ததனுல் பலன் ஏதும் ஏற்பட்டுவிடவில்லையெனவும், பிரதிகூலங்கள் அதிகம் என்றும் அரசு நம்புவதால் நிர்ப்பந்தங்களுக்குப் பணியத்தேவையிருக்காது என்ற கருத்தும் ஒரு பக்கம் நிலவுகிறது.

ஆயினும் 4000 கோடிக்கும் அதிகமான வெளியார் கடனை 4-ம் திட்டத்துக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இந்திய அரசுக்குச் சுமார் 950 கோடி மட்டும் கிடைக்க வாக்குறுதி மட்டும் பெறப்பட்டுள்ளதாகவும், திட்டப் பணிகளின் பிரம்மாண்டமான காரணத்தால், ஒருக்கால் இந்தியா வளைந்து கொடுக்கவேண்டி இருக்கலாம்; அப்போது மீண்டும் நாணயக் குறைப்பு ஏற்படலாம் என்றும் வல்லுநர்கள் கருத்தறிவிக்கிருர்கள்.

14. தேர்தலில் பணியாற்ற விரும்புகிறேன். என் சேவை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்கிறீர்கள்?

நல்ல கேள்வி! கழக ஏடுகளைத் தொடர்ந்து படிக்கிறீர்களா? தலைவர்கள் தரும் கருத்துரைகளையெல்லாம் மனதில் பதித்திருக்கிறீர்களா? எதிர்ப்படும் எல்லாரிடமும் அக் கருத்துரை பற்றி எடுத்துக் கூறுங்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சி அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் அறிந்துவைத்திருக்கிற காரணங்களைக் காட்டியே விளக்கம் தாருங்கள். துணை மன்றங்கள் ஏற்படுத்தியோ, வேறு வழியிலோ கழக ஏடுகளை அனைவரும் படிக்கும்படியாகச் செய்யுங்கள். உடனடியாக இப்போது செய்யு வேண்டியது இதுதான்.

❋